யாழ்ப்பாணம்

விலை ரூபா 1—25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆனி 4 ரம்ழான் 28 இதழ் 128
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 18-6-1985

### யாழ்ப்பாணத்துக்கு விரைவில் யாழ்தேவி வரும்

(கொழும்பு)

யாழ் தேவி ரயில் விரைவில் மீண்டும் யாழ்ப்பாணம் வரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

வவனியாவுக்கும் புளியங்குளத்திற்கும் இடையில் சேதமாக்கப்பட்டிருக்கும் ரயில் பாதையின் திருத்த வேலைகளை ரயில்வே திணைக்களம் விரைவில் மேற்கொள்ளும்.

ரயில்பாதை திருத்தப்பட்டதும் ரயில் சேவை மீண்டும் யாழ்வரை நடைபெறும்.

### கொள்ளையடிக்கப்பட்ட பல நெல் மூடைகளை 'ரெலோ' பிடித்துக் கொடுத்தது!

(யாழ்ப்பாணம்)

குருநகரில் உள்ள உணவுக் களஞ்சியத்தில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட அரிசி மூடைகளில் பலநூற்றுக்கணக்கானவற்றை 'தமிழ் ஈழ விடுதலை இயக்கம்' [ரெலோ] மீட்டெடுத்து யாழ். அரசாங்க அதிபர் ஊடாக உணவுக்களஞ்சியப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்துள்ளதாக, அந்த இயக்கம் தெரிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக 'ரெலோ' இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில், சில நாட்களின் முன்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள வேறு ஓர் உணவுக்களஞ்சியத்திலிருந்து கொள்ளை அடிக்கப்பட்ட மிளகாய் மூடைகளில் ஒரு பகுதியையும் மீட்டெடுத்து களஞ்சியப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்ததாகவும், மக்களின் அத்தியாவசிய தேவைகளைப் பாதிக்கும் இத்தகைய சம்பவங்களை இயக்கம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. [மா]

★ இனப்பிரச்னைக்கு தீர்வுகாண முன்னேடி நடவடிக்கை

# இரு தரப்புப் பேச்சுகள் அடுத்தமாதம் ஆரம்பம்

## தீவிரவாத இளைஞர்களும் கலந்து கொள்வர்

(கொழும்பு)

இனப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் வரும் ஜூலை மாதம் நடைபெறுமென்று நம்பகமான அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது. இப்பேச்சில் தீவிரவாத இளைஞர்கள் பிரதிநிதிகளும் கலந்துகொள்வார்கள் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை யுத்த நிறுத்தம் தொடர்பான திட்டமொன்றை அரசாங்கம் இன்று அறிவிக்கக்கூடும் என்றும் அந்த வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

இத்திட்டத்தை தீவிரவாத இளைஞர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் இதற்கு இந்திய அரசு ஒத்துழைப்பு வழங்கும் என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் வடக்கு கிழக்கில் அமைதியைத்தோற்றுவிப்பதற்கான அரசின் திட்டம் ஒன்று இன்று அல்லது அடுத்த சில தினங்களில் அறிவிக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்களில் பலத்த ஹேஷ்யம் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கில் இப்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பாதுகாப்புவலயத்தை நீக்குவது, ஊரடங்குச் சட்டத்தை நீக்குவது போன்ற அம்சங்கள் மேற்படி திட்டத்தில் முக்கிய அம்சங்களாக இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

இரு தரப்பிலும் ஏக காலத்தில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றி பேச்சுவார்த்தைகள் மூலம் முடிவெடுக்கப்படலாம் என்று கருதப்படும் அதே சமயம், உடனடியாக அரசுதரப்பில் முன்னேடியாக எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் பற்றி அறிவிக்கப்படலாம் என்று கூறப்படுகின்றது.

இதே சமயம் ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜயவர்த்தன

(7ம் பக்கம் பார்க்க)

### டிக்ஸிற் — நீலன் ஆலோசனை

(கொழும்பு)

இந்தியத் தூதுவர் திரு. என். டிக்ஸிற்றை டாக்டர் நீலன் திருச்செல்வம் நேற்று சந்தித்தார்.

இந்தியா ஹவுஸில் இந்தச் சந்திப்பு சுமார் ஒன்றரை மணிநேரம்வரை நடைபெற்றது.

இன்றையஅரசியல் நிலை, டில்லி பேச்சுவார்த்தை, யுத்த நிறுத்தம், வடக்கு கிழக்குப் பகுதிகளிலுள்ள தமிழ் மக்களின் அவலநிலை திருகோணமலை சம்பவங்கள் போன்றவை இந்த சந்திப்பின் போது முக்கியமாக ஆராயப்பட்டன.

தூதுவர் திரு. டிக்சிற் நேற்றுக் காலை ஜனாதிபதி திரு ஜெயவர்த்தனவைச் சந்தித்து இனப் பிரச்னை சம்பந்தமாக உரையாடினார். (மா)

### ராஜினமா ஏற்கப்பட்டது

(கொழும்பு)

எதிர்கட்சித்தலைவர் திரு. அனுரா பண்டார நாயக்காவின் செயலாளர் திரு. ஆர். பேரின்பநாயகத்தின் ராஜினமாவை எதிர்கட்சித்தலைவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

### ஆரையம்பதியில் 150 பேர் விசாரணை!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் நேற்றுக் காலை சுமார் நூற்றி ஐம்பது பேர் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

மட்டக்களப்பு, ஆரையம்பதி கிராமப் பகுதியில்தான் மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

### விசாரணை பாதிப்புறவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க செயலக ஓய்வூதியப் பகுதி தீக்கிரையானதால் ஓய்வூதியப்பகுதி ஊழியர் மூவரின் விசாரணை பாதிக்கப்படவில்லை என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது

### 18 பேர் தானும்

(கொழும்பு)

அண்மையில் மன்னாரில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தளம் இராணுவத்தால் தாக்கப்பட்ட பொழுது இறந்தவர் தொகை நூறுக்குமதிகமாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டபோதிலும் அங்கு பதினெட்டுபேரே இறந்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென்று நேற்று அரசு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது,

### தமிழ் இளைஞர் பலர் இன்று விடுதலை?

(கொழும்பு)

பூஸா முகாம் உட்படப் பல்வேறு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் பலர் இன்று விடுதலைசெய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பயங்கரவாத சம்பவங்களுடன் நேரடித் தொடர்பு இல்லாதவர்கள் எனக் கருதப்படும் இளைஞர்களே விடுவிக்கப்படவுள்ளனர் என்றுதெரிகின்றது.

### அனுரா சந்திப்பார்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுராபண்டார இந்தியா புறப்படுவதற்கு முன் சகல மதத்தலைவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்த இருக்கிறார்.

### இருபாலை ஜெப ஆலயத்தில் போதகர்களைக் கட்டிவிட்டு பொருட்கள் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

இருபாலை ஜெபஆலயத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 30 பேருக்கு மேற்பட்ட முகமூடி அணிந்த இனந்தெரியாத இளைஞர் கோஷ்டியினர் உட்புகுந்து அங்கிருந்த பெறுமதியான பொருட்களைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் வருமாறு: டிரக்டர் ஒன்றில் வந்த இக்கோஷ்டியினர் ஆலயத்தில் இருந்த நான்கு போதகர்களையும் கட்டிவைத்தும் அங்கிருந்த பத்து ஊழியசகோதரிகளைப் பலத்தகாவலில்வைத்துக்கொண்டு புனிதவழிபாட்டு இடத்தைத் தீவிர சோதனையிட்டனராம். பின்பு அங்கு

(8ம் பக்கம் பார்க்க)

### "நாளுக்கு நாள் அட்டூழியம் அதிகரிப்பு!" தஞ்சாவூரில் 'அமிர்'

[சென்னை]

இலங்கையில் பாதுகாப்பு படையினர் தமிழர்களுக்கு எதிராய் இழைத்துவரும் அட்டூழியங்களும், அக்கிரமங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையடுத்து இலங்கையிலுள்ள தமிழர்கள் தீவிரவாத நடவடிக்கைகளில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு வருவதாக தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு அ அமிர்தலிங்கம் நேற்று தஞ்சாவூரில் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழர்கள் கொலை செய்யப்படுவதைத் தடுப்பதற்கு திறம்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய அரசிடம் அவர் வேண்டுகோள் ஒன்றையும் விடுத்தார். (து)

### பஸ்மீது கல்வீச்சு சாரதிக்குகாயம்

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து வந்த தனியார் பஸ் மீது அளவையில், கல்வீச்சு நடந்ததால், சாரதி படுகாயமடைந்து, குருநாகல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பஸ்ஸும் சேதமடைந்துள்ளது பிரயாணிகளுக்கு காயம் ஏற்படவில்லை என பிரயாணி ஒருவர் தெரிவித்தார். (க)

### கைதடியில் அதிகாலை துப்பாக்கிச் சூட்டினுல் இருவர் காயம்!

(சாவகச்சேரி)

கைதடியில் நேற்று அதிகாலை லொறி மீது நடந்த துப்பாக்கி சூட்டில் இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த வி. இராசையா (56 வயது) கைதடியைச் சேர்ந்த நாதன் (26 வயது ஆகியோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### த. வி. பாதுகாப்புப் பேரணி இன்றுடன் கலைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த சிலகாலமாக இயங்கி வந்த தமிழர் விடுதலைப் பாதுகாப்பு பேரணி இன்றுடன் கலைக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

சிறிய இயக்கங்களைக் கலைத்து தமிழ் ஈழ போராட்டத்துக்கு உரமூட்டுவோம் தமிழ் ஈழம்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள துண்டுப் பிரசுரம் ஒன்றில் மேற்குறிப்பிட்ட தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைப் பாதுகாப்பு பேரணி அரசியற்குழுவின் பிரசாரவாரியம் இப்பிரசுரத்தை வெளியிட்டுள்ளது.

'தமிழர் விடுதலைப் பாதுகாப்பு பேரணி போன்ற சிறு சிறு அமைப்புகளால் விடுதலையை வென்றெடுக்க முடியாது என்பதனையும் தமிழ்பேசும் மக்களுக்கு புனிதமான இயக்கங்களின் மீது வெறுப்புணர்ச்சியை உண்டாக்கிவிடும் என்பதையும் உணர்ந்து கொண்டதால் இந்த அமைப்பினை கலைக்கும் முடிவை மேற்கொண்டதாக அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

### ஒரே இரவில் 4 டிராக்டர்கள் கடத்தல்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகர சபையின் நான்கு டிராக்டர்கள் நேற்று முன்தினம் இரவு இனந் தெரியாதவர்களினுல் கடத்திச் செல்லப்பட்டது.

ஏற்கனவே 3 டிராக்டர்கள் கடத்தப்பட்டு இதுவரை திருப்பி ஒப்படைக்கவில்லை.

இயக்கமொன்றின் பெயரைச் சொல்லியே, வந்தவர்கள் ட்ராக்டரை கடத்திச் சென்றனராம். [க]

# விளம்பரம்

## விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. கிலோ ரூ. 250/- பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 3877

பம்பாய் வெங்காய நாற்று விற்பனைக்குண்டு. தொடர்பு:- அராலி ப. வெ. உ. சங்கம் (கொட்டைக்காடு) 3878

Stop பிறேக் ஒயில் விற்பனைக்குண்டு. வர்த்தகர்கள் விசேட சலுகைக்குத் தொடர்பு கொள்ளவும். ட்றேட் சென்ரர், Home Finance Ltd, 155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 2862

யாழ் பாங்சால் வீதி இல: 81 இல் வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: V. T. and Sons, 11, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 3853

## தேவை

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியிலோ அல்லது அதற்கு அண்மையிலான பகுதியிலோ வீடு கட்டுவதற்கான காணி அளவான விலையில் நல்ல சுற்றுடலில் தேவைப்படுகின்றது. உங்களது ஆகக் குறைந்த விலையைக் குறிப்பிட்டுத் தொடர்பு கொள்ளவும். விளம்பர இலக்கம்; 3837 C/o ஈழநாடு யாழ்ப்பாணம் 3837

## தேவை

12'' கட்டர் (Disintegrator), 12'' கிறைன்டர், 10 HP மோட்டர், 5, 10 அந்தர் Avery தராசு தேவை. விலை விபரம் அறிவிக்கவும். விளம்பர இல: 3879 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3879

## தவறிவிட்டது

14-6-85 அன்று 787 மாதகல் மினிபஸ்ஸில் மாலை 4 30 மணிக்கு பிரயாணத்தின் போது 62 முக்கியமான போஸ்கார்ட் சைஸ் கலர் புகைப் படங்களுடன் 5 சேட்டிபிக்கட்டுகளும் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் தயவுசெய்து ''ஈழநாடு'' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். 3876

## வைத்தியம்

நோய்பிணி துன்பம் நீங்கி இனிது வாழவும், பேய்பிசாசு கோளாறுகளிலிருந்து விலகிக் கொள்ளவும். வியாபார ஸ்தலங்கள் வீடுகள் முதலியன காவல் பண்ணவும், கடற்தொழில் விருத்தி. வியாபார விருத்தி முதலியவற்றிற்கு இயந்திரத் தகடுகளும், துவாக்களும் செய்துகொடுக்கப் படும். குறிப்பு: (வெளிநாடுகளில் பிரபலமிக்கவர்) இறைவனின் சக்தியினால் மலையாள முறையில் உடன் செய்து கொடுக்கப்படும். முகவரி: ஷாஹிஷிபா ஆத்ம ஆரோக்கிய நிலையம், இல: 125, பீச்-ரோட். யாழ்ப்பாணம் 3777

## தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றிற்கு ஞாயிற்றுக்கிழமையில் கடமையாற்றக்கூடிய R. A. M. P. ஒருவர் தேவை. யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளோர் விரும்பப்படுவர். புதன், வியாழன், வெள்ளி 3 நாட்களிலும் 1 மணியிலிருந்து 3 மணிக்கிடையில் கீழ்வரும் முகவரியில் நேரில் சந்திக்கவும். முகவரி:- மு. மூஹமட், 62, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 3884

## FOR SALE

Pioneer - three in one (model LX-690) Sony speaker (two way system) and a show case- Balasubramaniam, 82/2, Kachcheri Nallur Road, Jaffna. (3886)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, இல. 392/1 யைச் சேர்ந்த மரணசாதனமின்றி மரணமெய்திய சின்னத்தம்பி நடராசா என்பவரின் மரணச்சொத்து விடயத்தில்.

—மரணமெய்தியவர்.

நடராசா பாலேந்திரன் இல. 392/1 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

—மனுதார்.

எதிராக:

வழ. இல. மரணசாதன நியாயாதிக்கம் T.3888

1. சின்னத்துரை ஸ்ரீதரனும் பெண்
2. கௌரிதேவியும் இருவரும் 320, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
3. வல்லிபுரம் மாணிக்கலிங்கமும் பெண்
4. இந்திராணியும்.
5. குணநாயகம் ஜெயசீலனும் பெண்
6. விஜயராணியும் எல்லோரும் 392/1 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

—எதிர்வாதிகள்.

மேலே குறிப்பிட்ட இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985-ம் ஆண்டு ஆடி மாதம் 26-ந் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாது என்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றனர்.

1985-ம் ஆண்டு வைகாசி மாதம் 16-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,

கு. குலசிங்கம்
பதிவாளர்.

என்னால் வரையப்பட்டது.
த. சோமசுந்தரம்,
சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிசு,
மனுதாரின் சட்டத்தரணி.
93/1 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். 3835

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## இடமாற்றம்

தற்பொழுது நிலவும் இக்கட்டான சூழ்நிலை காரணமாக எமது ஸ்தாபனமாகிய எ பவர் அன் கொம்பனி, இல: 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்திலிருந்து இல: 51, அம்மன் வீதி, யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. எமது தொலைபேசி இல: 24318 இதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.

மனேஜர்
எ. பவர் அன் கொம்பனி

3709

## 38-வது நாள் நினைவஞ்சலி

திரு. ந. சுந்தரமூர்த்தி

(பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை விஞ்ஞான ஆசிரியர்)



தோற்றம்: 28-11-1936

உதிர்வு: 12-05-1985

கல்விச்சேவையில் காலத்தை அர்ப்பணித்துகாலனுயிர் பறிக்கும் வரை கடமையைக் கருத்தாய்ச்செய்ததினால் மற்றவர்கள் இல்லையவர் சேவைக்கு ஈடேயென்று ஏங்கும் வண்ணம் எம்மை அந்தரத்தில்ஆழ்த்திவிட்டீர் சுந்தரரே.

அவரது ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை ஆசிரியர்களும், ஊழியர்களும்.

(3873)

## எழுத்தாளர் தந்தை காலமானார்

(யாழ்ப்பாணம்)

பிரபல எழுத்தாளர் திரு. எஸ். அகஸ்தியரின் தந்தை திரு. சவரிமுத்து தமது 90-வது வயதில் காலமானார். இறுதிச் சடங்குகள் நேற்று ஆனைக் கோட்டையில் நடந்தது.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

திரு. இராசரத்தினம் சிறீதரன் (சீயா)



மலர்வு: 6–4–52

உதிர்வு: 18–5–85

அன்பின் உருவமாய், பண்பின் சிகரமாய் கூறுகிய காலத்தில், உனது வாலிப வயதில் நாம் எதிர்பாராத நிலையில் எம்மை விட்டுப் பிரிந்த அன்பு உருவமே! உனது ஆன்மா சாந்தி பெற உமது பெற்றோர், சகோதரர், அண்ணிமார், நண்பர்கள், உற்றோர், உறவினர்கள் எந்நாளும் இறைவனை பிரார்த்திக்கிறோம்.

வீமன்காமம், தெல்லிப்பளை. 3875

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வேலணை மேற்கு

உயர்திரு. சுப்பிரமணியம் நடராசா (அப்புத்துரை)

(தெனிப்பிட்டிய வர்த்தகர்)



தோற்றம்: 3-1-1906

மறைவு: 28-6-1984

திதி: 18-6-1985

அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எம்மைத் துயரிலாழ்த்திப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்களும்.

''நடராச பவனம்'', வேலணை மேற்கு. 3883

## பேர்லின் பிரயாணம்

JUNE 24, 27 திகதிகளில் பிரயாணம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நிச்சயமான திகதி மாற்றமில்லாத பிரயாணம்.

### யாழ்-கொழும்பு-பங்கொக் வரை

எமது பிரதிநிதி உங்களுடன்.

★ கொழும்பில் தங்குமிட வசதி.
★ பிரயாண காசோலை.
★ பாஸ்போட். பொண்ட், விசா அனைத்துக்கும்

### லிப்ருஸ் லிமிட்டெட்,

R. G. பில்டிங், 70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

COLOMBO

LIBRAS LTD.
PAUL VI CENTRE,
24, FRONT STREET,
COLOMBO-1

● 'ரி. டபிள்யு. ஏ.' கடத்தல் நாடகம் தொடருகிறது——

# அமெரிக்கா, இஸ்ரேல் அதிரடியில் இறங்கலாமென அச்சம்!

பெய்ரூட், ஜூன் 17

அமெரிக்கா அல்லது இஸ்ரேலிய இராணுவ அதிரடிப் பிரிவினர் திடீர்த்தாக்குதல் ஒன்றை நடத்தி அமெரிக்க 'ரி. டபிள்யு. ஏ' விமானப் பயணிகளை மீட்கலாமென அவ் விமானத்தைக் கடத்தியவர்கள் தற்போது அச்சங்கொள்ள ஆரம்பித்துள்ளனர். இதனையடுத்து அவ் விமானத்தைச் சுற்றிவர கண்ணி வெடிகளையும் ஏனைய வெடிப் பொருட்களையும் வெடிக்கவைப்பதற்கென அவர்கள் ஆயத்தமாக வைத்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இந்த அமெரிக்க 'போயிங் 727' விமானம் கிரேக்கத்தில் இருந்து கடத்தப்பட்டது. அதனையடுத்து அவ் விமானம் இருதடவைகள் பெய்ரூட்டில் இறக்கப்பட்டது. தொடர்ந்து அல்ஜியர்ஸ் கொண்டுசெல்லப்பட்டு மீண்டும் அவ் விமானம் பெய்ரூட் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதுவரை சுமார் 90 பயணிகள் கடத்தல்காரர்களால் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். சுமார் 30 பேர் மட்டுமே தொடர்ந்து பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அல்ஜியர்ஸிலிருந்து பெய்ரூட்டுக்கு இவ் விமானம் கொண்டுவரப்பட்டது. அமெரிக்க அல்லது இஸ்ரேலிய இராணுவ அதிரடிப் பிரிவுகள் பணயக் கைதிகளான பயணிகளை மீட்பதற்கு முயற்சி எதனையும் மேற்கொள்ளலாமென கடத்தல்காரர்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அத்தகைய முயற்சிகள் எதுவும் இடம் பெறுமானால் அந்த 'போயிங்' விமானத்தைக் குண்டு வைத்துத் தகர்க்கும் வகையில் வெடிபொருட்களை அவ் விமானத்தைச் சுற்றி அவர்கள் தரையில் பொருத்தி வைத்துள்ளனர்.

இதுதவிர அதிரடிமுயற்சிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்வகையில் பெய்ரூட் விமானத்தள மின்விளக்குகளை அணைத்தும் இரவில் அணைக்கப்பட்டுள்ளன. விமானத்தைக் கடத்தியுள்ள 'ஷியாட்' முஸ்லிம் தீவிரவாதிகள் அமெரிக்க இஸ்ரேலிய அதிரடிப் படைகளை எதிர்பார்த்து 'ராக்கெட் லோஞ்சர்'கள் மற்றும் தொலைதூர துப்பாக்கிகளுடன் விமானநிலையத்தைக் காவல் காத்து வருகின்றனர்.

இதேவேளை இஸ்ரேலிய பாதுகாப்பிலுள்ள சகல 'ஷியாட்' முஸ்லிம் தீவிரவாதிகளையும்விடுதலைசெய்யவேண்டுமென்ற கடத்தல்காரர்களின் கோரிக்கையை இஸ்ரேலிய அரசுஆலோசித்துவருகின்றது.

பணயக் கைதிகளாக உள்ள பயணிகளும் இராணுவ நடவடிக்கைகள் மூலம் தம்மை மீட்கவேண்டாமென அமெரிக்க அதிபர் றீகனைக் கேட்டுள்ளனர். அப் பயணிகள் அனைவரும் அமெரிக்கர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இக் கடத்தல் நாடகத்தை சமரசமாக தீர்க்கும் முயற்சிகளும் தீவிரமாக இடம்பெறுகின்றன. (கி)

## சுவிஸ்ஸில் ரஜீவ்

ஜெனீவா, ஜூன் 17.

இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தி தமது வெளிநாட்டுப் பயணத்தில் 5-வது கட்டமாக நேற்று அமெரிககாவிலிருந்து சுவிற்சர்லாந்து வந்தடைந்தார்.

திரு காந்தி இங்கு சர்வதேச தொழிலாளர் மகாநாடொன்றில் உரை நிகழ்த்துவார். சுவிஸ் அரசு திரு காந்திக்கு பலத்த பாதுகாப்புடன் கூடிய வரவேற்பினை வழங்கியது.

சூழல் பாதுகாப்பிற்காக சுவிஸ் அரசாங்கம் மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு வழங்க விருந்த "ஜோன்பிலிப்" விருதை திரு ரஜீவ் காந்தியிடம் வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## காணித் தகராறு தீர்க்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வடக்கில் பல வருட காலமாக நீடித்து வந்த காணித்தகராறு வழக்கு ஒன்று அப்பகுதி கிராம முன்னேற்றச் சங்கத்தினராலும், இணைப்பு சபையாலும் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

## வேள்விப் பொங்கல்

(நயினாதீவு)

நயினாதீவு பீடாதி அம்பாள் வருடாந்த வேள்விப் பொங்கல் கடந்த சனிக்கிழமை சிறப்புடன் நடைபெற்றது. பெருமளவில் பக்தர்கள் கலந்துகொண்ட இப்பொங்கல் உற்சவத்தில் பாதுகாப்புப் படையினரும் ஆயுத பாணிகளாக வந்து வழிபாட்டுச்சென்றனர் இவர்களது வருகையால் அடியார்கள் மனதில் பீதிஏற்பட்டபொழுதும், எதுவித இடைஞ்சலுமின்றி உற்சவம் நிறைவடைந்தது.

## வவனியாவில் தகனம்

(வவனியா)

மதவாச்சி தவசிமலைச் சந்தியில் லொறிமீது கொள்ளையர் கூட்டம் சுட்டத்தில் பலியான லொறிச் சாரதியான ஷெல்டன் செனவிரத்தின (34வயது) வின் சடலம் வவனியாவுக்குக் கொண்டுவரப்பட்டு இங்கேயே தகனம் செய்யப்பட்டது.

லொறி கிளினர் செல்லத்துரை ஆஸ்பத்திரியில் இன்னமும் சிகிச்சைபெற்று வருகின்றார்.

கொழும்பு சென்ற இந்த லொறி வவனியா திரும்பிக்கொண்டிருக்கையிலேயே இச் சம்பவம் இடம் பெற்றது.

# ஆப்கான் குண்டுவெடிப்பில் 140 பேர் பலி!

காபுல், ஜூன் 17

வடக்கு ஆப்கானிஸ்தானில் கட்டிடம் ஒன்றுக்கு குண்டு வைக்கப்பட்டதில் சுமார் 140 பேர் கொல்லப்பட்டனர். இச் சம்பவம் கடந்த 5ம் திகதி இடம்பெற்றது. ஆயினும் நேற்றைய தினமே உததியோக பூர்வமாக இது அறிவிக்கப்பட்டது.

ஆப்கானிஸ்தான் கிளர்ச்சியாளர்கள் இக் குண்டுவைப்புக்கு உரிமைகோரியுள்ளனர்.

மூன்று மாடிகளைக் கொண்ட அக் கட்டிடத்தில் சிக்குண்டு மரணமான அனைவரும் சோவியத் சார்பு ஆளும் ஆப்கானிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களாவர். இவர்கள் இக்கட்டிடத்தை தமது ஒரு விடுதியாகப் பாவித்துவந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த நான்கு நாட்களாக இக்குண்டு வெடிப்பின் இடிபாடுகளை அகற்றும் பணிகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. ஆப்கான் கிளர்ச்சியாளர்களால் அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்ட மிக முக்கிய தாக்குதல்நடவடிக்கை இதுவென்று கூறப்பட்டது (கி)

★ 'ரஞ்சி'கோப்பை கிரிக்கெட்

# வெங்கட்ராகவன் 530 விக்கட்டுகள் சாதனை!

சென்னை, ஜூன் 17

தமிழகத்தைச் சேர்ந்த பிரபல சுழல்பந்து வீச்சு வீரரான எஸ் வெங்கடராகவன் தமிழக 'ரஞ்சி'க் கோப்பை கிரிக்கெட் பந்தயங்களில் 530 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

அவரின் இந்த அரிய சாதனையைக் கௌரவித்து தமிழகத்தில் நேற்று விசேட விருது ஒன்று அவருக்கு வழங்கப்பட்டது. தமிழக கிரிக்கெட் வீரர்களைக் கௌரவிக்கும்வகையில் இந்த விருது வழங்கும் வைபவம் நேற்று சென்னையில் இடம்பெற்றது.

ஆஸ்திரேலியாவில் இடம் பெற்ற பென்சன் அன்ட் ஹெட்ஜஸ்' உலகக் கிண்ண கிரிக்கெட், சாஜாவில் இடம் பெற்ற 'ரொத்மன்ஸ்' உலகக் கிண்ண கிரிக்கெட் ஆகியவற்றில் சிறப்பாக ஆடிய தமிழக வீரர்களான ஸ்ரீகாந்த், லக்ஷ்மன் சிவராமகிருஷ்ணன் ஆகியோரும் இவ் வைபவத்தில் கௌரவிக்கப்பட்டனர். இவர்கள் இருவருக்கும் தலா 5000 ரூபா அன்பளிப்பாக வழங்கப்பட்டது இவ் வீரர்களுடன் தமிழகத்தின் முதிய முன்னாள் கிரிக்கெட் வீரர்களும் நேற்றுக் கௌரவிக்கப்பட்டனர். (கி)

# செய்திச்சுருக்கம்

## கோப்பாயில் ஐந்து கல்வி வலயங்கள்

(கோப்பாய்)

கோப்பாய்க் கல்வி வட்டாரத்தில் அமைந்துள்ள 53 பாடசாலைகளும் அடுத்தாண்டு தொடக்கம் ஐந்து வலயங்களாகச் செயற்படும்.

அச்சுவேலி வலயம், கோப்பாய் வலயம், வசாவிளான் வலயம், புத்தூர் வலயம், நீர்வேலி வலயம் எனப்பிரிக்கப்பட்டிருக்கும்

வலயப்பாடசாலை அமைப்பில் அச்சுவேலி வலயத்திற்கு இடைக்காடு மகாவித்தியாலமும், புத்தூர் வலயத்திற்கு ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரியும், வசாவிளான்வலயத்திற்குவசாவிளான் மத்திய மகாவித்தியாலயமும் கோப்பாய் வலயத்திற்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியும், நீர்வேலி வலயத்திற்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியும் தலைமைப் பாடசாலைகளாக இருக்கும்.

## நீரில் மூழ்கி மரணம்

(பண்டத்தரிப்பு)

கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்ற 12 வயதுச் சிறுவன் ஒருவன் கிணற்றினுள் தவறி விழுந்து மரணமானார்.

யாழ்ப்பாணம் கொட்டடி, சிவன்பண்ணை வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுந்தரலிங்கம் என்பவரே இவ்வாறு பலியானவராவார். இவரது மரணவிசாரணையை மரணவிசாரணை அதிகாரி கே. கேசவன் நடத்தினார்.

அங்கு தெரிவிக்கப்பட்ட சாட்சியங்களை அடுத்து பிரேத பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டது. பிரேத பரிசோதனையை யாழ் மருத்துவபீடசட்ட வைத்தியத்துறைப் பேராசிரியர் டாக்டர் என். சரவணபவானந்தன் நடாத்தினார்.

விசாரணை முடிவில் நீரில் மூழ்கியதினால் ஏற்பட்ட மரணம் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

## கடையில் திருட்டு

(வவனியா)

வவனியா பஸ் நிலையத்தில் உள்ள ரேடியோ, மணிக்கூடு திருத்தும் கடை ஒன்று இரவுவேளை உடைக்கப்பட்டு பல பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

ரேடியோ, மணிக்கூடு திருத்தும் கருவிகளும்கூடத் திருடப்பட்டுள்ளன

திருத்துவதற்கெனப் பெறப்பட்ட ரேடியோ, மணிக்கூடுகளும் திருடப்பட்டுள்ளதாகக் கடை ஊழியர்கள் தெரிவித்தனர்.

பிரதான கடைக்கதவு பூட்டு உடைக்கப்பட்டே இத் திருட்டு நடைபெற்றுள்ளது.

## படுகாயம் அடைந்தார்

(புங்குடுதீவு)

அண்மையில் கிளிநொச்சியில் இடம்பெற்ற துப்பாக்கச் சூட்டுச் சம்பவத்தில் சென். திரேசா மகாவித்தியாலயத்தில் கல்வி போதிக்கும் ஆசிரியரான புங்குடுதீவைச் சேர்ந்த எஸ். ஈஸ்வரமூர்த்தி என்பவர் படுகாயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## புதிய நிர்வாகிகள்

(மண்டைதீவு)

மண்டைதீவு கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபையின் 34-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் நடப்பு வருடத்துக்கான உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றுப்பின் ஆலயத்தில் பொங்கல் விழா பற்றியும், ஊர்வலம், பாதுகாப்புப்பற்றியும் ஆராயப்பட்டது.

நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டர்.

போஷகர்: திரு. சி. வைரவநாதன், தலைவர்: திரு. வீ. சோமசுந்தரம், உப தலைவர்: திரு. கு. க. நடராசா, செயலாளர்: திரு. க. பேரின்பநாயகம், உப செயலாளர்: திரு. அ. ஸ்ரீரவீந்திரராசா, பொருளாளா: திரு இ செல்வராசா. ஏழு பேர் கொண்ட காரியக் கமிட்டியும் தெரிவு செய்யப்பட்டது.

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை றே. க. த. க. பாடசாலை அபிவிருத்திச்சங்க நடப்புவருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டோர் விபரம்:- தலைவர்;- திருமதி பா. கந்தசாமி (அதிபர்) உபதலைவர்: திரு. பொன்ராசா. செயலாளர்:- திரு. தே சிமியோன், உபசெயலாளர்:- திரு கி. கிறிஸ்தோப்பர், பொருளாளர்:- திரு. அ. கமலநாதன் (ஆசிரியர்), உப பொருளாளர்:- செல்வி சி. பொன்மலர், எண்பார்வையாளர்;- திரு சி. தேவராசா. 16 பேர்கொண்ட செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## புங்குடுதீவில் சைக்கிள் திருடர்கள்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் சைக்கிள் திருடர்களின் தொல்லை வெகுவாக அதிகரித்துள்ளது. பல இடங்களில் அடிக்கடி இச்சம்பவம் இடம்பெறுவதாகவும் தெரிய வருகின்றது

அண்மையில் புங்குடுதீவு 11-ம் வட்டாரத்தைச் சேர்ந்த குணம் என்பவருடைய சைக்கிளைத் திருடிய நபர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

## பாவற்குளம் வரை பஸ்சேவை

(வவனியா)

செட்டிகுளம் நகருக்கான பஸ்சேவை பாவற்குளம் வரையில் நடைபெற்றது.

செட்டிகுளத்திற்கு செல்லும் வழியில் பஸ்ஸில் பிரயாணிகளிடம் கொள்ளையிடப்பட்டதினை அடுத்தே சேவை பாவற்குளத்துடன் நிறுத்தப்பட்டது

செட்டிகுளம் உதவி அரச அதிபர் வவனியா டிப்போ அத்தியட்சகருடன் தொடர்பு கொண்டு நிலைமையினை விளக்கி செட்டிகுளம் வரையும் பஸ் சேவை இப்போது இடம் பெறுகின்றது.

[6ம் பக்கம் பார்க்க]

## மணிவாக்கு

நான் படித்ததில் பெரும் பகுதி கல்லூரியை விட்டு வெளியேறிய பின்னரே. அதிர்ஷ்டவசமாக, எல்லோருக்கும் கிடைக்காத சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது — நீண்டகாலச் சிறையில் அமைதியான சூழ்நிலை.

— ஜவஹர்லால்நேரு

# நமதுநோக்கு

## வடமாகாணம் வழிகாட்டட்டும்

பயங்கரவாதிகள் என்ற வாயால், தீவிரவாதிகள் என்றும், தீவிரவாதிகள் என்ற வாயால் விடுதலை வீரர்கள் என்றும் சொல்பவர் தம்மைத் திருத்திக் கொள்ளும் காலம் வந்தே திரும்.

உண்மை வெளிவரும். சத்தியவேந்தனின் ஆட்சி நிரந்தரமாக நீக்கப்படுவதல்லை.

விடுதலை வீரர்கள் நாம் என்று பேரம் பேசுபவர்கள் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல. பொன்னின் குடத்துக்கு எவரும் பொட்டிடுவதில்லை.

வடமாகாணத்திற்கு எவ்வாறு சுயாட்சி கிடைக்கும் என்று சட்ட நிபுணர்கள் தங்கள் தங்கப்பவுண் போன்ற தலைகளை உடைக்கின்றனர்; உடைக்கட்டும்.

கிழக்கு மகாணத்துக்கு என்ன கதி என்பது மற்றைய சோதிடம். இந்த அமந்தறை எல்லாம் யுத்த நிறுத்தம், சிவில் ஆட்சி, பொதுஜன வாக்கெடுப்பு அல்லது புதிய முறையில் தேர்தல் என்ற கேஷ்யம் ஏற்படுத்தும் விளைவு.

அரசியலில் காலம் விட்ட கூட்டம், முதல் இல்லாத வியாபாரம் செய்து செல்வர்களான பெருமைக்குரியது

சடுதியான ஒரு வீழ்ச்சி ஏற்பட்டால் ஆறி இருந்து சோதிடம் படித்து ஆராய்வதும், வியாழசுகம் கிட்டுகிறது என்றதும் தொகுதி வாரியாக வாக்காளர் மத்தியில் உலாவ துணிவு ஏற்படுவதும் இயற்கை.

இதனைக் குறை கூறவோ கண்டிக்கவோ முற்படுகிறவர்கள் மனித இயற்கையில் அனுபவமில்லாதவர்களே.

நாட்டில் நடந்து முடிந்த சம்பவங்களை அமைதியுடன் நோக்குங்கால் மனிதன் என்றும் மிருகத்தன்மையிலிருந்து விடுபடக்கூடியவனு என்ற சந்தேகம் மிக விசையாக வெளிவருவது தவிர்க்க முடியாததாம்.

ஆனால் இந்தப் பெருங் கொடுமைகள் மத்தியிலும் நட்பு, கருணை, தயவு, மன்னிப்பு என்ற பண்புகள் முற்றாக மடியவில்லை.

இதனை இங்கு வாழும் மக்கள் மனத்தில் பதிப்பது இன்று மிக மிக அவசியம்.

இளைஞர்களின் அஞ்சாமை, தியாகம், பொது நல உணர்வு, நமக்கு முன் நாடு என்ற கோட்பாடு நாம் கனவிலும் நினைத்திருக்காத, காரியங்களைச் சாதித்து விட்டன

ஆண்மை ஒருபுறம், அழிவு மறுபுறம், மரணம் ஒருபுறம், கௌரவம் மறுபுறம் கடினகட்டுப்பாடு ஒருபுறம், விடுதலை உணர்வு மறுபுறம் இவைபோன்ற உடன்பாடும் எதிர்மறையுங் கொண்ட சோடிக்கருத்துக்கள் போர் என்னும் பயங்கர மைதானத்தில் பரீட்சிக்கப்பட்டுள்ளன.

இத்துணை தூரம் ஒரு லட்சியத்துக்கு வடமாகாணம் வழிகாட்டியிருக்கிறதே என்ற பொதுஜன அபிப்பிராயம் நிறுவப்பட்டுள்ளது.

இலங்கைக்கு மட்டுமல்ல உலகுக்குமே பெருமை அளிக்கும் சான்றோர் வாழ்ந்த நாடு யாழ்ப்பாணம்; தமிழ்மக்களின் தலைநகரம் அடிமை வாழ்வுக்கு நிரந்தர இடமளிக்காதுஎன்றும் அழிவற்ற அந்த சான்றோர் கூட்டத்தினரை வழுத்துவோமாக.

அடுத்தபடி இன்று எம்மிற்பலர் சோழகக்காற்றின் வேகத்தில் மோகங்கொண்டு கொடிவிட ஆரம்பித்திருக்கிறோம்.

அது இயற்கை. பொல்லாப்பு என்னவென்றால் பட்டமும் கயிறும் தந்தி, மின்சாரக் கம்பிகளில் கொளுவுண்டு அனுவசியமான தொல்லைகளை ஏற்படுத்துகின்றன.

சற்றே பொறுமையாக இருக்கவேண்டியகாலம்; மக்கள் தம்தராசில் சமத்துவ புத்தி என்னும் படி மூலம் நிறைகுறையாது அளக்க வல்லவர்.

பேசுவதை எழுதுவதை பண்புடன் மிகைபடாது செய்வது மிக மிகஅவசியம். ஸ்பெயினின் தலைவர் கொன்சாலெஸ் தம்முடைய அரசியல் எதிரிகளை வினயத்துடன் கேட்பது, "பொறுமையாக இருந்து மக்களின் உள்ளக்கிடக்கையை அறிய உதவுங்கள்" என்பதே.

பத்திரிகைகளுக்கும் இந்த கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

வாய்பொத்திப் பேசாதிருக்கக்கற்றுக்கொள்ளுதல் பாடங்களுள் முதல் பாடமாகும்.

காமமும் குரோதமும் பயனற்ற போராட்டமும் பொய்யும் கொடுங்கோல் ஆட்சியின் குணங்கள். இவை நீங்க இவற்றை நீக்க இன்று இங்கு வாழும் தமிழர், குறிப்பாக வடமாகாணம் நாடனைத்துக்கும் வழி காட்டட்டும்.

## இன்று நயினை அம்பாள் கொடியேற்றம்

# அலைகடல் நடுவில் அருள் மழை பொழியும் அம்மை

அம்மாவுனது திருமுகங் காணுதழுதழுது
வெம்மாவுயுர்த்துயிர்த் தென்னிருகண்களும்
வீங்கினவே
எம்மானிடத்தினி லென்குறை சற்றே எடுத்தியம்பிக
கைம்மாறு செய்கிலே ஏனோ? நயினையிற் காரணியே.

— நயினை. பண்டிதர் நா. கந்தசாமி புலவர்.

பொங்கிடும் நெடுந் திரைப் புணரி நாற்றிசையும் பொருந்த நடுவேவியுலகிற் புகழ் பெருகு நயினைமா நகரினிலிருந்து மிகு புதுமை புரிபவள் அன்னை ஸ்ரீபுவனேஸ்வரி ஈழத்திலே இருக்கக்கூடியதான இருசக்தி பீடங்களும் ஒன்றுயமைந்த திருத்தலம் நயினை. இத்தலத்தின் மகிமையையும் அன்னை ஸ்ரீநாகபூஷணியின் அளப்பரிய கருணையையும் அளவிட்டுக் கூறுதல் அரிதிலும் அரிது. அவள் பெற்றதாலன்னை பெறுமூயிரனைத்தும் பேணலாலன்னை பெற்றிடுவோர் உற்றதாலன்னை விரும்பிய அனைத்தும் உதவலால் அன்னை எக்கலையுஞ் சொற்றதாலன்னை, உலகொடுவானும் தொழுதலாலன்னை என்றென்றும் பற்றதாங்கருணை பொழிதலால் அன்னை பராபரை ஸ்ரீநாகபூஷணி என்பார் அருட் கவிவள்ளல் நயினை நாகமணிப் புலவர்.

இத்தகு சிறப்பும் கீர்த்தியும் பெருமையும்மிக்க அன்னையின் தலமகிமைகளைப்பற்றி அநேக பூர்வீக வரலாறுகள் உள்ளதை அடியவர்கள் யாவரும் உணர்வர். அவற்றுள் நாகம் அர்ச்சனை செய்த வரலாறு

நா. வி மு. நவரத்தினம்
(விரிவுரையாளர்,
நுண்கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்)

மணிமேகலை புராணவரலாறு, கடலோட்டுக் காதை வரலாறு வெடியரசன் நாடகம், ஔவையார் பாடல் வரலாறு, மாசாத்துவான் கண்ணகி வரலாறு, தசீதி இராமாயணம், மாநாயகர் கல்வெட்டு, நாகராசன் வரலாறு போன்ற வரலாறுகள் குறிப்பிடற்பாலவை இவற்றைவிட கி. பி. கால போர்த்துக்கீச, ஒல்லாந்த, ஆங்கிலேய சரித்திர வரலாறும் சிந்திக்கற் பாலவை.

ஆரணத்து உபநிடத வகிரத் தொனியாகி ஆகாய வட்டமாகி அறுகோண மிருகோண முக்கோண நாற்கோண நிறமைந்துமாகி காரணத்து உருவாகி அருவாகி யாவுமாய் நின்று காத்திடும் அன்னையின் திருக்கோல அழகைக் கூறவந்த வரகவி முத்துக்குமாருப் புலவர் சோடுற்ற நவரத்ன கும்பியும் மேலிட்ட தொங்கலும் அகிலளாவிச் சொருகிட்ட கொண்டையும் சுட்டியும் மலர்க்கையாற் தொட்டிட்ட சிந்தூரமும் தோடுற்ற கொந்தழக மரகதக் கொப்புமார்து ணை விழியிலெழுதுமையும், துகளற்ற வெண்முரளமிருகு நற்பவளவாய்த்துவரு மொளிர் நளினமுகமும் தேடுற்ற செங்கமல பொற்பதமும் அழகான திருஉருவும் என அருள்மொழியாற் கூறுகின்ற கவியைமுதக் காட்சியில் காணவேண்டுமானால் இரதஉற்சவ விழாவிற் சென்று நாமும் காணலாம். நம் உடற்பிணி பவப்பிணி அக்கணமேயகன்று அவளின் திவ்ய கருணாமிர்தம் நமக்கு அக்கணமே கிடைத்துவிடுகின்றது. இது காலந்தோறும் அடியவர்கள் காணும் அனுபவஉண்மை.

(5-ம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழக மட்டத்தில் நடந்த பனைவள கண்காட்சி

பல்கலைக் கழக மட்டத்தில் முதல் தடவையாக பனைவளக் கண்காட்சியை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கண்டு களிக்க முடிந்தது. இலங்கைப் பனம்பொருள் அபிவிருத்தி சபையும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமும் இணைந்து நடாத்திய இப்பனைவளக் கண்காட்சி இம்மாதம் 13ம் திகதியிலிருந்து 15ம் திகதி வரை மூன்று தினங்கள் இடம்பெற்றன: இக்கண்காட்சியின்மூலம் தமிழ் பிரதேசத்தின் மூலவளம் மானபனை வளத்திலிருந்து இவ்வளவு உற்பத்திப் பொருள்களா என்று அதிசயிக்கும்வண்ணம் புதிய பல பனம் உற்பத்திப் பொருள்கள் காணப்பட்டன.

பனை ஓலை, ஈர்க்கு ஆகியவற்றைக்கொண்டு பெட்டி, பாய், கடகம் ஆகியவற்றைத்தான் செய்யமுடியுமென்ற நிலையை மாற்றி உல்லாசப் பயணிகளையும் வெளிநாட்டவர்களையும் கவரக்கூடிய அழகிய தொப்பிகள், கூடைகள், இயற்கையழகு மிளிரும் கிளிகளும், மயில்களும் கொஞ்சிக் குலாவும் பனையோலைச் சுவர் மாட்டிகள், தட்டங்கள், கைப்பைகள், பலவண்ண மலர்கள் ஆகியன காட்சிக்கும், கருத்துக்கும் விருந்தாக அமைந்தன பனையோலைப் பூக்கள் கணகாட்சியில் அழகிய மலர்த் தோட்டம் போலவே பிரே களிலிருந்து நவீன உற்பத்திப் பொருட்கள் காட்சியில் இடம் பெற்றிருந்தன. அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய கைத்தடிகள், ஆஷ்-டிரே, பேனு தங்கி, மின மேசை விளக்கு போன்றன கவர்ந்திருந்தன பனந்தும்பு உற்பத்தி பொருளாதார ரீதியாக எமக்கு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித்தரும் என்

தொகுப்பு: கொழும்புத்துறை நிருபர்

மையை ஏற்படுத்தியிருந்தன. பனம்பொருள் பயிற்சி நிலையங்களின் பயிற்சியாளர்கள் தமது கைவண்ணத்தில் பல புதிய கைப்பணி உற்பத்திப் பொருள்களை உருவாக்கிஇருந்தமை எம்மவர்களின் திறமையை வெளிக்காட்டும்வகையில் அமைந்திருந்தது.

கண்ணுக்கடங்காதனவாகவும், அளவிடற்கரியதாகவும் கைப்பணிப் பொருட்கள் காணப்பட்டன பனையோலை, ஈர்க்கு, மட்டை, பன்னுடை போன்றவற்றிலிருந்தே இப் பொருட்கள் உருவாக்கப்பட்டன என்பது வியப்பை ஏற்படுத்தியது. பனைமரத் துண்டு பதைப் பனந்தும்பு உற்பத்தி பற்றிய காட்சிப்பகுதி விளக்கியது. பல்வேறு தரத்திலான பனந்தும்புகள் தரவாரியாகப் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் பனந்தும்பினால் செய்யப்பட்ட பிரஷ் போன்ற உற்பத்திப் பொருட்களும் காட்சியில் இடப்பெற்றிருந்தன மரபு ரீதியான நவீன மயப்படுத்தபபட்ட பனம்உணவுப் பொருட்கள் பார்வையாளர் மத்தியில் பெரும் வரவேற்பையும், அமோக மவுசையும் பெற்றுக்கொண்டன எனலாம்

(-5ம் பக்கம் பார்க்க)

## ரமழான் சிந்தனை

கர்ப்பத்தில் இருக்கும் குழந்தை அது தனது வாழ்க்கைக்காக கர்ப்பத்தில்இருந்து உழைக்க முடியாது. ஆக அல்லாஹ் தனது வல்லமையைக்கொண்டு அதற்கு உணவு அளிக்கிறான். அக்குழந்தை பிறந்தவுடன் தனது தாயின் மார்பகங்களின் மூலமாக தனது உணவை அல்லாஹ்வால் பெற்றுக் கொள்ளுகின்றது. இது இறைவனின் ஏற்பாடு! கெட்டியான உணவை உட்கொள்ளும் பிராயத்தை அது அடைந்தவுடன் அதற்கு இறைவன் அவனது உணவை அரைத்து உள்ளே செமிபாட்டுக்கு அனுப்ப கெட்டியான பற்களை ஏற்படுத்துகின்றான்.

ஒரு பிள்ளை பிறக்கின்றது. திடீரென்று தாய் தந்தையரை இழந்தால் அக்குழந்தை பேரில் அன்புகாட்ட, அக்கறை செலுத்த வேறு மனிதர்களை அல்லாஹ் ஏற்பாடு செய்கின்றான். அதனுடைய தாய் தந்தையர் செலுத்தவேண்டிய அத்தனை அன்பையும் அவர்கள் மூலமாக அக் குழந்தை பெற்றுக்கொள்கின்றது. பல பேர்களுடைய அன்பையம், இரக்கத்தையும் அது பெற்றுக்கொள்கின்றது. ஆக! இந்த அன்பு இரக்கம் இவை இரண்டையும் அக் குழந்தை மேல் ஏற்படச் செய்தவன் யார்? உன்னை என்னைப் படைத்த இறைவன். அவன் தான் அல்லாஹ்!

தொகுப்பு:
அ. க. அக்பர் ஜின்னு

## பனை வள அபிவிருத்தியில் புதிய அத்தியாயம்!

பனை அபிவிருத்திச் சபை இதுகாலவரை நடத்திய பல கண்காட்சிகள், கருத்தரங்குகள், ஆய்வரங்குகளில் மக்கள் கவனத்தை ஈர்ந்தவை இரண்டாகும்.

இவற்றில் ஒன்று 1982-ல் யாழ்ப்பாண நகரில் நடைபெற்ற உலக பனைவள மகாநாடு. அதில் நடைபெற்ற கண்காட்சியும், ஆய்வரங்கும் உலக ரீதியான உதவிகளையும், கருத்துக்களையும் எமக்கு அளித்தந்தன. அந்த மகாநாட்டின் பயனாக இந்திய பனைத் தொழில் நிபுணர் திரு. கே.

—எஸ். பாலசிங்கம்—

[7ம் பக்கம் பார்க்க]

# தமிழ்ப் போராளிகள் காணும் தமிழ் ஈழம்

## விரைவில் உதயமாகும் சாத்தியம்

தமிழீழம் விரைவில் அமைக்கப்படக்கூடிய சாத்தியங்கள் தோன்றியுள்ளதாக 'ஈரோஸ்', 'ஈ பி ஆர் எல். எவ்.', 'ரெலோ', 'புலிகள்' ஆகியவற்றை உள்ளடக்கிய 'ஈழத் தேசிய விடுதலை முன்னணி' கருதுகின்றது. இதனை இந்தக் கூட்டமைப்பு 'தமிழீழ அரசு' எத்தகைய பாணியில் இருக்குமென்பதுகுறித்தும், அதன் கொள்கைகள், நடைமுறைகள்பற்றியும் விரிவான விளக்கமொன்றை வழங்கியுள்ளது.

'சோஷலிஸ' அமைப்பு முறையிலேயே 'ஈழத் தேசிய விடுதலை முன்னணி' உறுதியான பற்றுவைத்துள்ளது. இந்தியாவின் கலப்புப் பொருளாதாரக் கொள்கையையும், சோவியத் யூனியனின் காத்திரமான அரசியல் உறுதிப்பாட்டையும் தழுவியதாக 'தமிழீழ அரசு' காணப்படும் என்று இந்த முன்னணிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கமே தமிழீழத்தில் அமைக்கப்படும். எந்த வகையிலும் இந்த அரசாங்க அமைப்பு தமிழர்கள்மீது திணிக்கப்படமாட்டாது.

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தீவிரவாத இயக்கங்கள் அனைத்தும் 'தமிழீழ அரசு' அமைக்கப்பட்டதும் கலைக்கப்பட்டுவிடும்.

இந்த இயக்கங்களின் உறுப்பினர்கள் புதிய அரசில் வலதுசாரி, இடதுசாரி, மத்திய தரப்பு ஆகிய மூன்று கட்சிகளில் சேர்ந்து தேர்தல்களில் இறங்குவார்கள்.

ஜனநாயக வழிகளில் நடத்தப்படும் தேர்தல்களில் வெற்றி பெறும் கட்சி ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளும்.

எனவே இத்தகைய 'தமிழீழ' அரசு விரைவில் அமைக்கப்படும் சாத்தியங்கள் தோன்றியுள்ளதால், அதற்கான அடிப்படைத்திட்டமொன்றை உருவாக்குவதில் ஈழத்தேசிய விடுதலை முன்னணி தனது செயற்பாடுகளை விரிவாக்கியுள்ளது

தமிழீழத்துக்கான அரசியல், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் ஏற்கனவே திட்டப்பட்டுவிட்டன:

### இரு பிரிவுகள்

இத்திட்டத்தினடிப்படையில் ஈழத் தேசிய விடுதலை முன்னணி இரு வேறு முக்கிய பிரிவுகளைக் கொண்டுள்ளது.

இப்பிரிவுகளில் ஒன்று அரசியல் சார்பானது இரண்டாவது இராணுவ சார்புடையது.

இராணுவப் பிரிவு இலங்கை இராணுவத்துடனான மோதல்களுக்குப் பொறுப்பாக இருக்கும்.

அரசியல் பிரிவு ஐந்து முக்கிய கிளைப் பிரிவுகளுடன் பல்வேறு அமைப்புக்களைக்கொண்டிருக்கும்.

இக்கிளைப் பிரிவுகளில் முதலாவது பிரிவு, தமிழர் பிரச்னையை சர்வதேசரீதியில் பிரபலப்படுத்தும் பணியை ஏற்கும்.

இரண்டாவது பிரிவு தமிழ் அகதிகள் பிரச்னையைக் கையாளும்.

மூன்ருவது, பிரசாரங்கள், தகவல்கள் என்பவற்றுக்குப் பொறுப்பாக இருக்கும்.

நான்காவது பிரிவு, பொருளாதார, அபிவிருத்திப் பணிகளில் திட்டங்களை மேற்கொள்ளும். இவற்றில் தென்பகுதியிலிருந்து பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகளை வடக்கு, கிழக்குப் பகுதிகளில் குடியமர்த்துவதும் முக்கிய பணியாக இருக்கும்.

ஐந்தாவது கிளைப் பிரிவு அரசியல்நடவடிக்கைகளைக்கொண்டிருக்கும். மற்றைய கிளைப் பிரிவுகளில் அங்கம் பெருத தமிழ் அரசியல்வாதிகள் இதில் இடம்பெறுவார்கள்.

ஈ. தே வி முன்னணியை மூன்று உடனடிப் பிரச்னைகள் எதிர்நோக்குகின்றன அவற்றில் ஒன்று தமிழீழ விடுதலைக் கழகத்தை (புளொட்) இக்கூட்டமைப்பில் சேர்ப்பது.

இரண்டாவது இந்த அமைப்பு, சகல தமிழர்களையும்பிரதிநிதித்துவப்படுத்துகின்றன என்றரீதியில் அனைவரினதும் அங்கீகாரத்தையும் பெறுவது.

மூன்ருவது, தலைமைப் பதவியொன்றை ஏற்படுத்துவதாகும். இக்கட்டமே சோதனைக்குரியதாகும். தலைமைப்பதவிப் பூசல்காரணமாக இந்த அமைப்பு சீர்குலையவும்கூடும். இதனைத் தவிர்ப்பதற்கு ஒரு தலைமையை ஏற்படுத்தும் வகையில் ஒரு கூட்டுத் தலைமைப் பீடத்தை ஏற்படுத்துவது பற்றி முடிவுசெய்யவேண்டி நேரிடும்.

இந்தியாவினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைவர் ஒருவரையே தமிழீழம் கொண்டிருக்கவேண்டும் என்பதில் ஈ தே வி. மு. ஆர்வம் கொண்டுள்ளது.

எனவே தமிழ் ஈழத் தலைவர் இந்தியாவின் அங்கீகாரத்தைப் பெற்றவராக இருக்க வேண்டும் இக்கட்டத்தில் பங்களாதேஷ் முன்னாள் ஜனாதிபதி முஜிபுர்ரஹ்மானுக்கு நேர்ந்த கதி ஏற்படாமல் இருக்க இம்முன்னணி விழிப்பாக இயங்க வேண்டும்.

**பத்திரிகை: 'லண்டன் டெலிகிராப்'**

**எழுதியவர்: அனிதா பிரதாப்**

ஈ தே வி. முன்னணி தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் முற்ருக உதாசீனம் செய்யப்பட முடியாதவர்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றது சர்வதேச ரீதியில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் உரிய இடமுண்டு என பலர் கருதுகின்றனர்.

ஆனல் ஈ தே வி. முன்னணி தமிழர் விடுதலைக் கூட்டணியினர் விடயத்தில் மூன்று நிபந்தனைகளை முன்வைத்துள்ளது.

1. தமிழீழத்தை அமைப்பதற்கு ஆயுதப் போராட்டமே அத்தியாவசியமான வழி

2 ஈழம் பூரண சுதந்திரம் பெற்ற ஒருநாடு என்பதை ஏற்றுக்கொள்ளல்.

3 ஈழத்தை ஒரு சோஷலிஸ நாடாக ஏற்பது

இம்மூன்றின் அடிப்படையிலேயேதமிழர் விடுதலைக் கூட்டணி ஈ தே.வி மு வினல்ஏற்றுக்கொள்ளப்படும். [கி]

## திருட்டுப் பொருள்களுடன் ஊர்வலம் சென்றனர்

(மாவிட்டபுரம்)

திருட்டுப்பேர்வழிகள் நால்வர் பிடிக்கப்பட்டு அவர்கள் மூலம் கைப்பற்றப்பட்டதிருட்டுப் பொருள்களுடன் அவர்கள் நால்வரும் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டு திருட்டு இடம்பெற்ற ஸ்தாபனத்தில் மீட்கப்பட்ட பொருட்கள் ஒப்படைக்கப்பட்டன

இச்சுவையான சம்பவம் காங்கேசன்துறையில் இடம் பெற்றது.

காங்கேசன்துறை ஐக்கிய வியாபாரச்சங்கக் கிளையிலும் மற்றும் வர்த்தக ஸ்தாபனங்களிலும் அண்மைக்காலமாகத் திருட்டுகள் இடம் பெறறு வந்ததையடுத்து சில இளைஞர்கள் இவற்றுக்குக் காரணமானவர்கள் யார் என்பதுபற்றி ஆராய்ந்துவந்ததாகவும் அதன்பயனக நான்கு நபர்கள் பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நபர்களால் காங்கேசன்துறை ஐக்கியவியாபாரச் சங்கக்கிளையில் திருடப்பட்டு தனியார் கடை ஒன்றில் விற்கப்பட்ட சில பொருட்களை மேற்படி இளைஞர்கள் கைப்பற்றி இந்நபர்களின் தோள்களில் சுமந்துவரச் செய்து காங்கேசன்துறை நியூ கோ ஸ்தாபனத்திலிருந்து சந்தைவழியாக ஊர்வலமாகக் கூட்டிச்சென்று ஐக்கியவியாபாரச்சங்க கிளையில் பொருட்களை ஒப்படைத்தனர்.

அத்துடன் மேலும் இவர்களால் திருடப்பட்ட பொருட்களை மீட்கவும் மேற்படி இளைஞர்கள் முயற்சி எடுத்துள்ளனர்.

இவர்கள் திட்டமிட்டிருந்த மற்றெரு திருட்டு முயற்சியும் இவ்விளைஞர்களால் முறியடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இளைஞர்களின் இந்த முயற்சிக்கு காங்கேசன்துறை வர்த்தகர்களும் பொதுநலவிரும்பிகளும் பெரிதும் ஆதரவு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## வவனியாவில் வங்கி வேலைகள் தாமதம்

(வவனியா)

வவனியா இலங்கை வங்கியில் வேலைகள் ஆமைவேகத்தில் நடைபெறுவதாக வாடிக்கையாளர்கள் புகார் தெரிவித்தனர்.

இந்த வங்கிக்கு ஒரு வாடிக்கையாளர் சென்று திரும்புவதென்ருல் சுமார் ஒரு மணி நேரம் செலவிடவேண்டியுள்ளது

வெளிநாட்டு காசோலைகள், உட்பட அநேக வங்கி வேலைகள் இங்கு இடம்பெற்ருலும் கூட வாடிக்கையாளர்களுடைய வரவின் தொகையும் இங்கு அதிகமாகவே உள்ளது

## யாருடையது

யாழ். நாவலர் வீதியைச் சேர்ந்த திரு ரி, பாஸ்கரன் என்பவர் யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில் ஒரு திறப்புக்கோர்வையைக் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர் அலுவலகநேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## இன்றைய பலன்

மாதம்; ஆனி
திகதி: 4 (1985-6-18)
வாரம்: செவ்வாய்
திதி: அமாவாசை பிற்பகல் வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் முன்இரவுவரை

மேடம்: செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும், உறவினர் ஒருவருக்கு உதவி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படலாம்.

இடபம்: குடும்பக் கவலையுடன் குறுக்குவழித் தலையீடும் இடையிடையே தென்படும். உங்களைப்பற்றி புனைந்துரைகளைப் பரப்புவதற்கு சிலர் முற்படுவார்கள்.

மிதுனம்: இனபந்துக்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும் மனக்குமைச்சல்களினல் வேதனைப்படுவீர்கள். சிறிய விசயத்திற்கும் இடமுண்டு.

கடகம்: அமைதிக்குப்பங்கம் ஏற்படும் சம்பவங்கள் இடம் பெறும். நெருங்கிய நண்பர் ஒருவரின் உடல்நலம் பாதிக்கப்படலாம். செலவுக்கும் இடமுண்டு.

சிங்கம்: எதையும் முன்னணியில் நின்று செய்வதை இன்று பின்போடவும். பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு விஷமிகளின் புனைந்துரைகள் வேதனையைத் தரும்.

கன்னி; பந்தபாசம் உங்களை பரவசப்படுத்தும். உறவினர்கள் உற்சாகமான வரவேற்பைக் கொடுப்பர். கல்வித் துறையில் அதிக ஈடுபாடு ஏற்படும்.

துலாம்: மற்றவர்களின் இன்னல்களுக்கு இரக்கம் காட்டுவீர்கள். தாராளமானகுணத்தின்மூலம் தனமும் செலவாகும். புண்ணிய யாத்திரையுமுண்டு.

விருச்சிகம்: பணம் பலவழிகளிலும் செலவாகும். அந்நியர் ஒருவரால் ஏமாற்றமடையக்கூடும். நிதானம் வேண்டும்

தனுசு: உள்ளத்தில் அமைதி குன்றும் இல்லத்தில் பூசல்கள் தோன்றி மறையும்.

மகரம்: வாழ்க்கை ஒருசுமையாகத் தோன்றும். கடன் தொல்லைகள் அதிகரிக்கும். மனத்தை ஒருவழிப்படுத்தி செயலாற்றவும்.

கும்பம்: கலைஞர்கள் போற்றப்படுவார்கள். சிலருக்கு புண்ணிய காரியங்களில் ஈடுபாடு ஏற்படும். குருவின் ஆசி தாராளமாகக் கிடைக்கும்.

மீனம்; கடமையாற்றும் இடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும் புதிய கண்டுபிடிப்புக்களில் ஊக்கம் ஏற்படும். சுபதினம்.

உணவு விடயத்தில் கவனம் செலுத்தவும்.

திருமலை
வே ரவீந்திரன்

## பல்கலைக்கழக...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பனம்கோடியல், பனம் சிரப், பனம் கிரஷ் பனம் பானம், ஜம், கல்லாக்காரம், ரொபி, பனை வெல்லம், பனஞ் சீனி, பனம்பழச்சாறு போன்ற பல்வேறு பனம் உணவுப் பண்டங்கள் எமக்கினிப் பஞ்சமில்லை என்பதைநிரூபிப்பதுபோலிருந்தன பனஞ்சீனியை எவ்வாறு உற்பத்தி செய்யலாம் என்பது பற்றிப் பனஞ்சீனி உற்பத்தி இயந்திரம் மூலம் விளக்கிக் காட்டப்பட்டதுடன் பார்வையாளர்கள் பனஞ்சீனியைச் சுவைத்துப் பார்க்கவும் முடிந்தது

காட்சியில் இடம்பெற்ற சித்திரங்களும், வரைபடங்களும், பனைவள அபிவிருத்தியையும், பனம்பொருட்களை உபயோகிக்கவேண்டிய அவசியத்தையும் விளக்கும் கார்ட்டூன்களும், தரவுகளும் பனை உற்பத்தியின் முக்கியத்துவத்தை மேம்படுத்துவனவாக இருந்தன இக்கண்காட்சி பனம் பொருள் அபிவிருத்தியையும், சாதனைகளையும் விளக்கும் வகையில் அமைந்துள்ளதுடன் பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் வளர்ச்சிக்குச் சான்ருகவும் விளங்குகின்றது. சரித்திரத்தை மாற்றுவதில் பல்கலைக்கழகங்களுக்கு பங்குண்டு: பனம் பொருள் அபிவிருத்திச் சபை பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்படுவது சரித்திரத்தை மாற்றுவதில் பொருளாதாரரீதியிலான தனது பங்கினை வெளிப்படுத்துவதாகும்.

மூன்று நாட்கள் இடம் பெற்ற இப்பனம்பொருள்கண்காட்சி இதுவரை பனைவள அபிவிருத்தி தொடர்பாக ஏற்பட்ட முன்னேற்றங்களை எடுத்துக்காட்டுவதுடன், மக்களிடையே பனைபற்றிய ஒருவிழிப்புணர்வினையும் ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

## திருமலை ஆசிரியர்களுக்கு விசேட லீவு

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் அனைவருக்கும் சம்பளத்துடன் கூடிய விசேட லீவு வழங்கப்படும்.

அங்குள்ள பதட்டநிலை தணியும் வரை அவர்களுக்கு இந்த விசேட சலுகை வழங்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக திருகோணமலையில் பல அசம்பாவிதங்கள் நடந்ததையடுத்து ஆசிரியர்கள் அங்கு கடமை புரிய அஞ்சி தம்மை வேறுபகுதிகளுக்கு இடமாற்றம் செய்யும்படி கல்விச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்ததையடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## அலைகடல்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

''வந்தழுதேன் என்பவங்கள் தீர்ப்பாய்என்றும் வாரிஅணைத்துன் மடியில் வைப்பாயென்றும் நொந்தபிணி நோக்கோடு தீர்ப்பாயென்றும் நொடிப்பொழுதில் கையேந்திக் காப்பாய் என்றும் சுந்தரத்தேரடி நின்று கண்ணீர்சிந்தி சோக முறைப்பாடுரைத் தேனம்மா தாயே எந்தனைக் கண்ணுக்கிப் பேரின்பந்தாராய் எமதரிய நயினைநகர் நாகம்மாளே' என்று நாவலூர் கவிஞர் ஞா. ம செல்வராசன் கூறுவதும் நினைவுகூரற்பாலது

அருட்கோலங்கொண்ட அன்னையைப் போற்றி அடியார் ஈந்தபாமாலையோ அநந்தம், துங்கமிகு நயினையில் தங்கியே புவனந்தனைக்காக்கும் புவனேஸ்வரியை வேண்டிக் கவியோகி சுத்தானந்தபாரதியார், 'அலைகடல் நடுவே வாழும் அருட்பெருங் கடலே போற்றி கலைவடிவான தெய்வக் காட்சியே கவினே போற்றி நிலைபெறுமனதினுள்ளே நிலவிடும் சுடரேபோற்றி மலையினு மாண்பு மிக்க மந்திரமணியே போற்றி வேண்டுவார் இன்னும் மங்கல மணம் பாவுமலர் தலைக்காலை போல் மணமாய இருள்போக்குவாய் மலைசிலாத் தென்றல்போல் வந்தெனது சோர்வினை மாற்றிமணம் வீறு தருவாய், பொங்குதிரை ஆழி போல் என்உள்ளம் பூரிக்கப் பொதுவேத மூசொலிப்பாய் புண்பட்ட நெஞ்சிலே வெண் படடு நிலாவெனப் போந்து சாந்தம் அளிப்பாய் செங்கதிர் ஞாயிறெனவே எனது சிந்தை மிசை திவ்ய ஞானம் பொழிகுவாய், சிங்கமென வீரமும் தருமூலர் யோகமும திருக்குறளின் வாழ்வும் அருளாய்'' என்று வேண்டுவதை நாமும் மனமொழி மெய்களால அவள் திருப்பாதங்களை வழுத்தி வேண்டியாங்கு அருள்பெற்று இன்புறுவோமாக.

# ஆசிரியர்களில்லாததால் பாடசாலைகளுக்கு மூடுவிழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சில பாடசாலைகள், ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினால் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை இம்மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்கள், நுவரேலியா, அநுராதபுரம் போன்ற வெளி மாவட்டங்களுக்கு நியமனம் பெற்றுள்ளனர் என்று கிளிநொச்சி மாவட்ட வித்தியாதிபதி ஜனுப் எம். எப். மன்சூர் அவர்களைச் சந்தித்த இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க நிதிச் செயலாளர் நா. சோதிநாதன் தெரிவித்துள்ளார்:

கிளிநொச்சி மாவட்டத்தில் கௌதாரிமுனை, கிரஞ்சி, தம்பிராய் ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகள் ஆசிரியர்கள் இல்லாமல் மூடப்பட்டுள்ளதாகவும் திரு. சோதிநாதன் தெரிவித்தார்.

இங்குள்ள பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி கற்பிப்பதற்கு நாநூறு ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறையுண்டென்றும், ஆங்கிலப்பாடம் கற்பிப்பதற்கு என்பத்தேழு ஆசிரியர்கள் தேவையென்றும் அவர்மேலும் தெரிவித்தார்.

# "பனைவள அபிவிருத்தியை நவீனமாக்குவது அவசியம்"

## பனம்பொருள் கண்காட்சியில் உரை

(கொழும்புத்துறை)

''பனைவள அபிவிருத்தியைத் தற்காலத் தேவைகளையும் நிலைமைகளையும் கவனத்திற் கொண்டே திட்டமிடுதல் வேண்டும். பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் தொழிற்பாடுகளும் திட்டங்களும் இவற்றினை உள்ளடக்கிய வகையில் அமைந்துள்ளது மகிழ்ச்சியளிக்கின்றது. பனைவள அபிவிருத்தியை நவீனபடுத்தவேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது. இதற்கு இக்கருத்தரங்கு பயன் தரக்கூடிய ஆலோசனைகள் பலவற்றைத் தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை''

இவ்வாறு இலங்கைப் பனம்பொருள் அபிவிருத்திச் சபையும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமும் இணைந்து நடாத்திய பனைவள ஆய்வுக்கருத்தரங்கை நேற்றுக் காலை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. வி. என். சிவராஜா குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளரும், சபைப் பணிப்பாளருமான திரு. எஸ் வேலாயுதபிள்ளை தலைமையில் இந்த ஆய்வுக் கருத்தரங்கு நடைபெற்றது கலாநிதி சு. மோகனதாஸ் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா பேசுகையில், ''எமது மக்களின் பொருளாதார வளமாகப் பனைவளம் விளங்குவதால் எமது மத்தியிலுள்ள நிபுணர்களும், அறிஞர்களும் பனைவள ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவேண்டும். பல்கலைக் கழக மட்டத்தில் எமது பணிகளையும் ஆராய்ச்சிகளையும் கொண்டுவந்துள்ளதன்நோக்கமும் இதுவேயாகும் எமது பனம் பொருள் உற்பத்திகள் நாட்டிலும், வெளிநாடுகளிலும் பிரபல்யம்பெறத் தொடங்கியுள்ளன.''

கலைப்பீட மாணவர் பிரதிநிதி திரு. க. சுவர்ணராஜா, பனம் பொருள் அபிவிருத்திச் சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு சோ. கோகுலதாசன் ஆகியோரும் உரையாற்றினர். ஆய்வுக் கருத்தரங்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

# கல்லூரி தமிழ் மன்றம் தயாரித்த திரைப்படம்

(வட்டுக்கோட்டை)

''திரைப்படத்துறையில் கலைஞர்கள் உருவாகச் சமூகம் தடைக்கல்லாக இருக்கின்றது. நாட்டில் நல்ல கலைஞர்கள் இல்லாமல் இல்லை. திரைப்படத்துறையில் இவர்கள் தமது திறமையைக்காட்ட இயலவில்லை'' இவ்வாறு திரைப்படக் கலைஞர் இயக்குநகர் திரு. வி எஸ், நேசானந்தா யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ் மன்றத் தயாரிப்பான 'கல்லூரி வசந்தம்' என்னும் திரைப்பட வெளியீட்டின்போது குறிப்பிட்டார். ஆசிரியர் திரு. பி விஜயகுமார் தலைமையில் சித்தன்கேணி மாதர் சங்க மண்டபத்தில் இவ்விழா நடந்தது.

# விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட சங்கானையைச் சேர்ந்த எஸ். ஈஸ்வரன் அல்லது ஈசன் என்பவர் தொடர்பானவழக்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதவான் திரு பி. ராமநாதன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டு விசாரணை மீண்டும் இம்மாதம் 17ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது

சந்தேகநபர் 1984ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதிக்கும் மார்ச் 5ம் திகதிக்குமிடையில் சங்கானையில், சிவானந்தன், சத்தியமூர்த்தி, துருவன், மீரான் மாஸ்ரர், சிவபாலன் ஜீவராஜா, குமார் ஆகியவர்களின் பயங்கரவாத நடவடிக்கைகளை அறிந்திருந்தும் அதுபற்றி பொலிசாருக்குத் தகவல் கொடுக்கத் தவறியதாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது

இந்த வழக்கு எந்த நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட வேண்டும் என்பதுபற்றி தீர்மானிப்பதற்காக 17ம் திகதி வழக்கு மீண்டும் எடுத்துக் கொள்ளப்படும்.

எதிரி சார்பில் திரு. குமார் பொன்னம்பலம் ஆஜராகியிருந்தார்.

# பதிவாளர் நியமனம்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய்ப்பிரிவு விவாகம், பிறப்பு, இறப்பு பதிவாளராக திருமதி யோகீஸ்வரி ஸ்ரீ வரதராஜன் இம்மாதம் 14-ம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இம்மாதம் 14-ம் திகதி காலை யாழ்ப்பாணம் மேலதிக மாவட்டப் பதிவாளர் திரு எல். இராசையா முன்னிலையில் புதிய பதிவாளராக சத்தியப் பிரமாணம் செய்து தமது பதவிக்கான நியமனக் கடிதத்தைப் ஏற்றுக் கொண்டார்.

# சிகைஅலங்கரிப்பாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குருநகரைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட சிகை அலங்கரிப்பாளர் சமூக அங்கத்தவர்களுக்கு குருநகர் தொடர்மாடி வீடுகளில் போதியளவு வீடுகள் ஒதுக்கித்தரப்படவில்லை என்ற கோரிக்கையை தெரிவுக் குழுவினரிடம் வடஇலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கம் சமர்ப்பித்துள்ளது.

மேற்படி சங்கச் செயலாளர் திரு த. பரமலிங்கம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. த. பூ. முருகையாவைச் சந்தித்து உரையாடியதற்கு முகாமையாளர் நியாயமான நீதியான வேண்டுகோள் தீர்த்து வைக்கப்படும் என்ற உறுதியை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாவனையாளர் சங்கங்கள் புனரமைப்பு

[சுண்டுக்குளி]

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள சகல பாவனையாளர் சங்கங்களும் கலைக்கப்பட்டுப் புனரமைப்புச் செய்யும் வேலைகள் நடைபெறுகின்றன. இப் பாவனையாளர் சங்கங்களில் அங்கத்தவராகச் சேர விரும்புவோர் இம் மாதம் 15 ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இத் திகதி இம்மாதம் 30-ம் திகதிவரை நீடிக்கப்பட்டிருப்பதாக யாழ். உள்நாட்டு வியாபார உதவி ஆணையாளர் திரு சி. மார்க்கண்டு தெரிவித்துள்ளாார். ஜூலை மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் இரு மாவட்டங்களிலும் இதற்கான தேர்தல்கள் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

மேலதிக விபரங்களுக்கு அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலர், உதவி அரசாங்க அதிபர்கள், ஆகியோருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மயிலங்கூடல்

# வேளாங்கண்ணி மாதாகோவில் பரிபாலனசபை

(யாழ்ப்பாணம்)

மயிலங்கூடல் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமுகமாகவும் ஆலயத்தைச் சிறந்தமுறையில் பரிபாலிக்கவும் ஒருசபை அமைக்கப்பட்டுள்ளது

சமயவேறுபாடு இல்லாமல் பிறமதத்தாரும் வழிபடும் இவ்வாலயத்திலிருந்த சுரூபங்கள் அண்மையில் இனந்தெரியாதவர்களால் அநாகரிகமான முறையில் திருடப்பட்டது தெரிந்ததே.

இவ்வாலய பரிபாலனசபை நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்: திரு சூ. பாக்கியநாதர், செயலாளர்: திரு செ. பத்திநாதர், தனதிகாரி திரு அ யே. அல்பிரட்

உறுப்பினர்கள்: பி யோசேப், இ த. அ. துரைசிங்கம், அ. ஆனந்தராசா, சி. தம்பிநாயகம், கொ. செல்வராசா, யோ மரியநாதர், வ. அமிர்தநாயகம், அ. ஜெயரட்ணம்.

இவ்வாலய விழா வருடா வருடம் செப்டெம்பர் மாதத் தி. 8ம் தேதியை அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமையில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

# செய்திச் சுருக்கம்..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## வருடாந்த உற்சவம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 22ம் திகதி சனிக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்த மாதம் 1ம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

## தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்டத்தில் கிராம சேவை அலுவலர்களினால் மக்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ் பத்திரங்களுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கிராம சேவை அலுவலர்களினால் கட்டணம் எதுவுமின்றி வழங்கப்பட்டு உதவி அரசாங்க அதிபரினால் மேலொப்பமிடப்பட்டு வழங்கப்படும் இந்த சான்றிதழ் பத்திரங்கள் பாஸ்போட் பெறுவதற்கும் இதர தேவைகளுக்கும் மிகவும் அத்தியாவசியமானவையாகும்.

கொழும்பிலிருந்து இந்த சான்றிதழ் பத்திரங்கள் யாழ். அரசாங்க செயலகத்திற்கு இதுவரை வந்துசேரவில்லை என்றும் தற்காலிக ஏற்பாடாக தட்டச்சில் ரோணியோவில் அச்சடித்து கிராமசேவை அலுவலர்களுக்கு விநியோகிப்பதற்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## சங்காபிஷேகம்

(நவாலி)

நவாலி அருள்மிகு அந்திரான் முருகமூர்த்தி கோவிலில் நேற்று திங்கட்கிழமை மணவாளக்கோலவிழா சிறப்பாக நடைபெற்றது:

காலை எட்டுமணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி முருகப்பெருமானுக்கு ஆயிரத்தெட்டு சங்காபிஷேகமும், சண்முகப்பெருமானுக்கு நூற்றெட்டு சங்காபிஷேகமும் நடைபெற்றது. சுவாமி வீதிவலம் வந்தார்.

## விளையாட்டுப் போட்டி

(உடுவில்)

நவாலி மகா வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டி இம்மாதம் 27-ம் திகதி பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டு போட்டிகளுக்கு யாழ்ப்பாண கல்வி திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. எஸ் சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

## உ. அ. அதிபர் நினைவாக பஸ்தரிப்பிடம்

(வவனியா)

அகாலமரணமான வவனியா உதவி அரச அதிபர் திரு. ஆ குணநாயகம், பிரதம இலிகிதர் திரு. என். பாலசுப்பிரமணியம் ஆகிய இருவரது நினைவாக வவனியாவில் பஸ்தரிப்பிடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இத்தகவலை வவனியா தெற்கு தமிழ் பிரிவு உதவி அரச அதிபர் அலுவலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## நிர்வாகிகள் தெரிவு

[கோப்பாய்]

சிறுப்பிட்டிஅரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அபிவிருத்திச் சங்க புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு கே. சிவப்பிரகாசம் (அதிபர்) செயலாளர் செல்வன் பி ருவேந்திரா பொருளாளர் திருமதி ச கனகம்மா உபசெயலாளர் செல்வி ச. அனுரா

7 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

# மகோற்சவம்

[யாழ்ப்பாணம்]

உரும்பராய் ஓடயம்பதி அருள்மிகு கற்பகவிநாயகர் கோவில் வருடாந்த உற்சவம் இன்று நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து நாட்கள் உற்சவம் நடைபெறும்.

# நயினை உற்சவம்

(நயினாதீவு)

அருள்மிகு நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 15 திருவிழாக்கள் நடைபெறும். அடுத்த மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும், இரண்டாம் திகதி தீர்த்தத் திருவிழாவும் அதைத் தொடர்ந்து பூங்காவனத் திருவிழாவுடன் உற்சவம் நிறைவுபெறும்.

கொடியேற்றத் திருவிழாவன்று வழமைபோல் அன்னதானம் வழங்கப்படவுள்ளதாக அமுதசுரபி அன்னதான சபையின் தலைவர் வே. க த. தம்பிமுத்து தெரிவித்தார். பகல் உற்சவம் காலை 7.00—12 00 வரையும் இரவு உற்சவம் பி. ப 2 00—5.30 வரையும் நடைபெறவுள்ளது.

## வான் கடத்தல்

(வவனியா)

வவனியா நகரில் உள்ள ஒரு பிரபல வியாபார நிலையத்திற்கு சொந்தமான வான் ஒன்று மன்னார் வீதியில் வைத்து கடத்தப்பட்டுள்ளது.

இனம் தெரியாத இளைஞர்களே இக் கடத்தலை நடத்தியுள்ளார்கள்.

இக்கடத்தல் தொடர்பாக வான் உரிமையாளர் வவனியா பொலிஸில் புகார் செய்துள்ளார்.

## மலையக மரக்கறிகள்

(வவனியா)

மலையக மரக்கறி வகைகள் வவனியா சந்தைக்கு வருகின்றன.

லீக்ஸ், கரட், கோவா, போன்ற மரக்கறி வகைகள் பெருமளவு வந்து குவிகின்றன.

## இளம் பெண் தற்கொலை

(மாவிட்டபுரம்)

படம் பார்க்க கணவன் அழைத்து செல்லவில்லை. மனமுடைந்த இளம் குடும்பப் பெண் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்த பரிதாபகரமான சம்பவம் ஒன்று அராலியில் இடம் பெற்றுள்ளது.

அராலியைச் சேர்ந்த தவநாதன் தேன்மொழி (23வயது) என்னும் பெண்ணின் மரணம் குறித்து தெல்லிப்பளை திடீர் மரண விசாரணை அதிகாரி என். தம்பிராசா விசாரணை நடாத்தினார்.

தெல்லிப்பளை மாவட்ட வைத்திய அதிகாரி எஸ் கதிரவேலுப்பிள்ளை பிரேத பரிசோதனை நடாத்தி சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

''இறந்தவர் மூச்சுத்திணறி மரணம் அடைந்துள்ளார். இவரின் வயிற்றில் 6 மாதச் சிசு ஒன்று இருந்தது'' என்று கூறினார்

விசாரணை முடிவில் தற்கொலை என்று தீர்ப்பு வழங்கப்பட்டது

## புதிய நிர்வாகிகள்

(சாவகச்சேரி)

நவபுரம் துர்க்கை அம்மன் தேவஸ்தான பரிபாலன சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் ஆலயமுன்றலில் நடைபெற்றது.

பூசை அபிஷேக ஒழுங்குகள் ஆலய நிர்மாண வேலைகள் பற்றி இக்கூட்டத்தின் போது ஆராயப்பட்டது தேவஸ்தானத்தின் நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் சி தங்கராசா. செயலாளர் வே. சிவலிங்கம், பொருளாளர் கனகம்மா தங்கராசா மேலும் ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

**லதா மினி**
(கோண்டாவில்)
10-30, 2-00, 4-00
ALICE GOOD BODY
வயது வந்தவர்களுக்கு மட்டும்

**ராஜா தியேட்டர்**
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30
கமலஹாசன்-ஜெயப்பிரதா
**சலங்கை ஒலி**
கடைசிவாரம்

**ஸ்ரான்லி மினி**
(சினிமா)
5'X5" திரையில்
10-30, 2-15, 4-15
**DIVINE EMMANUEL**
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

சிவன் மினி சினிமா
K. K. S. றோட், சிவன் கோயிலடி சந்திக்கு முன்பாக
17-6-85 முதல்
10-30, 12-30, 2-30, 4-30
BLACK DEEP THROHT
கண்டிப்பாக 18 வயதுக்கு ட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்.

**லிடோ** சினிமா
பாண்டியன் — ரேவதி நடித்த
**'புதுமைப் பெண்'**
(ஈஸ்மட்ன் கலர்)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
16-30, 2-30
பாக்கியராஜ் - சரிதா நடித்த
**மௌன கீதங்கள்**
(ஈஸ்மன் கலர்)

**குமரன் மினி**
சினிமா
(67, ஸ்ரான்லி வீதி)
9-00AM, 1-00PM.
EMMANUEL KISS ME
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்
10-45, 2-45
கமல், ஊர்வசி, அனுராதா
**அந்த ஒரு நிமிடம்**
(டிக்கட்டுகளுக்கு முந்துங்கள்)

**தேவிமினி**
சினிமா
(வின்ஸர் தியேட்டர் அருகாமை)
தினசரி— 10.30, 2.15
4.00 p. m.
Client Eastwood
IN
**The Bridge At Remagen**
(Eastman color)
பயங்கர திகிலூட்டும் சண்டைகள் நிறைந்த படம்


## யாழ்–நல்லூர் சென். ஜோன் அம்புலன்ஸ் நிருவாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப்படையின் யாழ்-நல்லூர் படை அத்தியட்சகர் பிரிவு நிர்வாகசபை கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவு செய்யப்பட்டது.

உறுப்பினர்கள் விபரம் வருமாறு: போஷகர்கள்: டாக்டர்கள்: ஈ.பி. இராசையா (மாகாண ஆணையாளர்) ஆர். சுகந்தன் இன்னுசித்தம்பி (மாவட்ட ஆணையாளர்) திரு. வி. கணேசலிங்கம் (மாவட்ட அத்தியட்சகர்).

தலைவர்: எஸ். செல்வரஞ்சன் உபதலைவர்: எஸ். சத்தீஸ்வரன், செயலாளர் கே. சுபரமணியம், உபசெயலாளர் என். நகுலராஜ், தனாதிகாரி எஸ். கண்ணதாசன் பத்திராதிபர் பி. தர்மரெத்தினம், உப பத்திராதிபர்: எம். ஞானசம்பந்தன், கணக்குப்பரிசோதகர் கே. கைலாசநாதன் நான்குபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.


**மொடேர்ண் மினி சினிமா**
(ஸ்ரீலங்கா அச்சக லேன் ராஜா தியேட்டருக்கு அருகாமை)
**நனா Nana**
இளம் உள்ளங்களை ஏங்க வைக்கும் காதல் காவியம்
கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு மட்டும்.

**வின்ஸர்**
தினசரி 10-30, 2-00, 4-15
007 Roger Moore in THE FICTION MAKERS
ஜேம்ஸ் பொண்ட் நவீன ஆயுதங்களுடன் மிகப் பயங்கரப் பயணத்தைச் சித்தரிக்கும் ஓவியம்.

**பவித்ரா மினி**
கஸ்தூரியார் வீதி
(யாழ். இந்துக் கல்லூரியடி)
10-30, 2-30 4-30
**SUMMER IN HEAT**
(Adults)
3840

S. T. L. மினிசினிமா
(திருநெல்வேலி)
காட்சி: 10-30, 12-30 2-30 4-30
UNDER THE DOCTOR
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்

**ஆனந்தி வீடியோ சினிமா**
(மனோகராவில்)
தினசரி 10-30, 2-30
பிரபு, ரேவதி, கவுண்டமணி நடித்த
**கன்னி ராசி**
கலர்

**நியூசாந்தி (மினி)**
யாழ். சாந்தி சினிமாவில்
10 30, 2-15 4-15
Kirk Douglas, Lee Mervin
**Battle of Commandos**
Full of Action Sex, War Film


# பனைவள அபிவிருத்தியில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தனினது சேவையும் இரண்டு வருடங்கள் எமது நாட்டிற்கு கிடைத்திருந்தது.

அதையடுத்து இம்மாதம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் பனை அபிவிருத்தி சபையும் இணைந்து நடத்திய ஆய்வரங்கும். கண்காட்சியும் பெரும் பயனைத் தந்துள்ளது என்று துணிந்துகூறலாம். ஆய்வுத் துறையிலும், அபிவிருத்தித் துறையிலும் ஆர்வமும், ஈடுபாடும் கொண்ட ஒரு பொது முகாமையாளர் தற்பொழுது பனை அபிவிருத்திச் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளதால் பல்கலைக்கழக ஆய்வுத் துறையோ இச்சபைக்கு ஒரு நல்ல இணைப்பு ஏற்பட்டுள்ளதை இதில் காணக்கூடியதாக இருந்தது.

இந்த ஆய்வரங்கில் ஆய்வுரை நிகழ்த்திய பீடாதிபதிகள், பேராசிரியர்கள் எமது பிரதேச மூலவளமான பனை வளத்தின் அபிவிருத்தியில் எவ்வளவு தூரம் தமது ஆற்றலைச் செலவு செய்துள்ளனர் என்பதை இதில் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. இவர்களது ஆர்வம், ஆற்றல் எமது இந்த பொருளாதார வளத்துக்கும், அபிவிருத்திக்கும் ஒரு பெரும் வித்தாகக் காண முடிந்தது.

உயிரியல், பொருளியல், புவியியல், இரசாயனவியல், தாவரவியல் பிரிவுகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எமது வளத்தை விரிவாக்க எவ்வளவு தூரம் பயன்படுகின்றனர். பயன்படுத்த வேண்டியவர்கள் என்பதை இந்தஆய்வரங்கு எமக்கு அறிவுறுத்தியுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் பொதுமன்ற மண்டபத்தில் இடம்பெற்ற இக் கண்காட்சியை விஞ்ஞானத் துறைத் தலைவர் பேராசிரியர் கே. குணரத்தினம் திறந்து வைத்தார்.

1982-ம் ஆண்டு யாழ். நகர மண்டபத்தில் இடம்பெற்ற கண்காட்சியின் பின்பு மூன்று ஆண்டுகள் இடைவெளியின் பின் இந்த அபிவிருத்தியில் ஏற்பட்டுள்ள பலவிதமான முன்னேற்றங்களை இக் கண்காட்சி மிகத் துலாம்பரமாக எடுத்துக்காட்டியிருந்தது.

பனை உணவுப் பொருட்கள் நவீனமுறைப்படுத்தப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளதையும். இதுகாலவரை வீட்டுப் பாவனைகளுடன் மட்டும் இருந்துவந்த பனையோலைப் பொருட்கள் அழகுசாதனப பொருட்களாகவும், நவீன பாவனைப் பொருட்களாகவும், ஏற்றுமதிப் பொருட்களாகவும் காட்சி கொடுத்திருந்தது இச்சபையின் உற்பத்திப் பிரிவின் மகத்துவத்தையும், போதனாசிரியைகளின் முன்மாதிரிகளையும், உற்பத்தியாளர்களதும் பயிற்சியாளர்களதும் ஆர்வத்தினையும், செயற்பாடுகளையும் வெளிப்படுத்தியிருந்தன.

கலாநிதி சோ. கந்தையா எடுத்துக்காட்டிய ஆய்வுகளின் பெறுபேறுகள் பல பனை உற்பத்தி வளத்தைப் பெருக்குவதற்கு மிக துணை நிற்கக் கூடியவைகளாக இருந்தன. கட்டையான பனைகளை வளர்த்தெடுத்தல், அதிகளவு பழங்களைப் பெறத்தக்க பனைகளை உருவாக்குதல் போன்ற ஆய்வுகள் காலப்போக்கில் ... மிகமிக அத்தியாவசியமாகின்றன.

பதநீரும் அதன் தேவைகளும் அதிலிருந்து உருவாகும் மக்களுக்குகந்த சத்துணவுகளையும் பேராசிரியரிர் எஸ். மகேஸ்வரனின் ஆய்வுகள் நன்றாகத் தெளிவுபடுத்தின.

பேராசிரியர் கே. தெய்வேந்திரராசாவின் ஆய்வுளும் பனை அபிவிருத்தியின் முக்கிய பல விடயங்களை எடுத்துக் காட்டின மருந்துக்குப் பயன்படுத்தும், மதுசாரம், போதைப் பொருளாகபாவிக்கப்படுவதையும், எரிபொருளுக்கு பாவிக்கப்படும் நிலையில் உள்ள மதுசாரத்தை மக்கள் பாவனைக்கு விடமுடியாது என்பதையும் அவரது ஆய்வு எடுத்துக்காட்டி நின்றது. சாராய உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கும் ஒரு எடுத்துக் காட்டாக அமைந்திருந்தது.

பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம், கலாநிதி வீ நித்தியானந்தன், கலைப்பீடாதிபதி என். பாலகிருஷ்ணன், ஆகியோரது ஆய்வுக்கருத்துக்கள் பனைவளத்திற்கும். அபிவிருத்திக்கும் எமது முயற்சிகளும் அறிவும் மிக முக்கியமானவை என்பதை தெளிவுபடுத்தியிருந்தன. பொருளியற்துறையில் பனை எமக்கு எத்துணை வலுவானது என்பதை கலாநிதி நித்தியானந்தனின் கருத்துக்கள் தெளிவாக்கியிருந்தன. பேராசிரியர் பீ. பாலசுந்தரம் பிள்ளை எடுத்துக்காட்டிய கருத்துக்கள் எமது நிலவளத்தின் மீது நம்பிக்கையற்று அன்னியநாட்டு மோகம் கொண்டவர்களுக்குப் பெரும் பயனுள்ள எடுத்துக்காட்டுகளாக அமைந்திருந்தன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு வி. என். சிவராசா இந்த ஆய்வரங்கைத் தொடக்கி வைத்து ஆற்றிய உரை பனைமரத்தின் தத்துவத்தையும் ஆரம்பத்தில் மக்கள் வாழ்வில் அது பயன்பட்ட வகைகளையும் மிகத் தெளிவாகக் காட்டியது.

இந்த ஆய்வரங்கின் காலை நிகழ்ச்சிகளுக்கு பனை அபிவிருத்திச் சபையின் இயக்குனரும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருமான திரு. சு. வேலாயுதபிள்ளை தலைமை தாங்கியது. இச்சபைக்கு கூட்டுறவு இணைப்பில் ஒரு தனிச் சிறப்பைக் கொடுத்திருந்தது. இந்த ஆய்வரங்கின் இறுதி நிகழ்ச்சியாக இடம் பெற்ற பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவு மாணவிகளது கலை நிகழ்ச்சிகளை சிறப்பாக அமைத்த நுண்கலைப்பிரிவு மாணவிகளுக்கும், விரிவுரையாளர்களுக்கும் நன்றிகூறாமல் இருக்க முடியாது. வாணி வாத்தியத்தில் அவர்கள் கண்ணனை இசைத்தது மிகப்பிரமாதமாக இருந்தது

இச்சபையின் தலைவரும், மற்றும் உறுப்பினர்களும் வரவேற் நடவடிக்கைகளில் சுறுசுறுப்புடன் காணப்பட்டது இக்கண்காட்சியின் வெற்றியை எடுத்துக்காட்டி நின்றது.

## கோப்பாய் சிவத்துக்கு பாராட்டு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி 'ஈழநாடு' வாசகர் வட்ட செயலாளரும் பிரபல எழுத்தாளருமான கோப்பாய் சிவத்தின் "நியாயமான போராட்டங்கள்" சிறுகதைத் தொகுப்பு நூல் அடுத்த மாதம் முதல வாரத்தில் வெளியிடப்படவுள்ளது.

ஆக்கவுரிமைகள் வியாபாரக் குறிகள் பதிவகம் பிரஸ்தாப சிறுகதைத் தொகுப்பிற்கு 5000 ரூபா பரிசு வழங்கியது குறிப்பிடத்தக்கது

கோப்பாய் சிவத்தை கௌரவிக்குமுகமாக கிளிநொச்சி பத்திரிகையாளர் வாசகர் நலன் புரிச் சங்கத்தினர் மேற்படி தொகுப்பை வெளியிட்டு வைக்கின்றனர். இவரது பத்திரிகைத்துறை ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு நூலும் பூர்த்தியாகி உள்ளதால், "நியாமான போராட்டங்கள்" வெளியீட்டு விழா அன்றே இவ் ஆய்வு நூலையும் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

## இருதரப்புப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லண்டன்பினான்ஸியல் டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்துள்ள ஒரு பேட்டியில் தமிழ் தீவிரவாத இளைஞர்களுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் இந்தியாவில் விரைவில் பேச்சுவார்த்தைகள் நடைபெறலாம் என சூசகமாக தெரிவித்துள்ளார். இதற்கு இந்திய அரசு சகல உதவிகளையும் வழங்கும் என்றும் தீவிரவாதிகள் ஆயுதத்தை கைவிடும் சாத்தியம் இந்தியா உதவியினால் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


விற்பனையாகின்றது !
குழந்தைகளுக்கான
**ஆரம்ப விஞ்ஞானம்**
**தரம் 3 — ஆண்டு 4**
(85 ஆம் ஆண்டு புதிய பாடத் திட்டத்திற்கான புதிய பதிப்பு)
வெளியீடு:
**ஞானசுரபி புத்தகக் கம்பனி**
யாழ்ப்பாணம். (3872)

வியாழன், சனி, திங்கள்
**பேர்லின்**
செல்வதற்கு ஆசனங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்
**AIR-TRANSIT**
ஏயார் ட்ரான்சிற்
99-2/56 B, சுபூர் பில்டிங், 2-வது மாடி, கொழும்பு - 1. போன்: 549365
538 (290), ஆஸ்பத்திரிவீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். போன்: 22689

## மரண அறிவித்தல்

### பஞ்சரெத்தினகோபால் சாந்தாராமன்

யாழ்ப்பாணம் கன்ணுதிட்டி திரு சாந்தாராமன் காலமானார். இவர் கன்ணுதிட்டி அம்பிகா ஜுவல்லர்ஸ் உரிமையாளர் துரையப்பா பத்தர் பஞ்சரெத்தின கோபால், திருமதி பஞ்சரெத்தினகோபால் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், சத்தியபாமாவின் அன்புக் கணவரும், விட்டல், நரசிம்மன் ஆகியோரின் அருமைத் தந்தையும், திருமதி சிவஞானம் இராசம்மாவின் அன்பு மருமகனும், லட்சுமண பிரசாத், தீனபந்து, சம்பத், ஜானகிராமன், கஸ்தூரி, கௌரி, மோகாம்புஜம் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக, 6/12, கன்ணுதிட்டி ஒழுங்கை இல்லத்திலிருந்து 19-6-85 புதன்கிழமை காலை 10 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். உற்ருர், உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

(3895)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை வைத்திலிங்கம்

திரு. வேலுப்பிள்ளை வைத்திலிங்கம் (இளைப்பாறிய பிரதி அதிபர், வைத்தீஸ்வரா வித்தியாலயம்) காலமானுர். இவர் பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், சிவபாக்கியம், அருள்நந்தி (விவசாய ஆராய்சி நிலையம் பேராதனை), சிவானந்தன் (தொலை தொடர்புத் திணைக்களம் கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவன்தாசன் (இளைப்பாறிய கணக்காளர்) புவனஜோதி (U. S. A.), சித்திரா (ஆசிரியை)வின் அன்பு மாமனுரும், சஞ்ஜீவின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 19-6-85 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

84, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

3893

## மரண அறிவித்தல்

### திருமதி பகவதி அம்மா வீரசிங்கம்

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி பகவதி அம்மா வீரசிங்கம் 17-6-85ல் காலமானுர். இவர் காலம்சென்ற வேலுப்பிள்ளை வீரசிங்கத்தின் (இளைப்பாறிய ஓவசியர்) அவர்களது அன்பு மனைவியும், கெங்கேஸ்வரி சண்முகநாதனின் அன்புத் தாயாரும், காலம்சென்ற முதலியார் சம்பந்தர் (இளைப்பாறிய மேற்பார்வையாளர் உப்புக் கூட்டுத்தாபனம்) காலம்சென்ற நடராசா (கிராமக்கோட் நீதவான்), காலம்சென்ற தம்பியப்பா (ஆசிரியர்), காலம்சென்ற செல்வநாயகம் (R.M.P.), திருமதி மதியாபரணம், திருமதி இராமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr. V. சண்முகநாதனின் அன்பு மாமியும் ஆவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் 18-06-85 செவ்வாய்க்கிழமை (இன்று) மாலை 3 மணிக்கு 48, கச்சேரி நல்லூர் ரோட் யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

(3891)

## மரண அறிவித்தல்

### விசுவநாதர் பார்வதிப்பிள்ளை

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆனைப்பந்தியடியில் வசித்தவரும் காலம்சென்ற விசுவநாதரின் அன்பு மனைவியுமாகிய பார்வதிப்பிள்ளை காலமாகிவிட்டார் இவர் வர்த்தகர் வி சுப்பிரமணியம், மார்க்கண்டு, கனகரட்ணம், ராசதுரை, கந்தசாமி (மன்னுர் காணிப் பதிவுக் கந்தோர்) ஆகியோரின் அருமை அன்னையாரும், புங்குடுதீவு 6ம் வட்டாரதைச் சேர்ந்த காலம்சென்ற பொன்னுச்சிப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை சின்னம்மா, கந்தையா, அன்னப்பிள்ளை, இணுவில் பிரபல வர்த்தகரும், நித்தியானந்தா ஸ்ரோர்ஸ் உரிமையாளருமாகிய சி பரமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும். ராசம்மா, நித்தியலட்சுமி மகேஸ்வரி, அருளம்மா, ஜெகதாம்பாள் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஆனைப்பந்தி இல்லம். 61/5 பருத்தித்துறை வீதியிலிருந்து 19-6 85 புதன்கிழமை காலை 10-00 மணிககு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி. பரமலிங்கம்
(ஈழநாடு நியூஸ் ஏஜன்சி)

(3896)

ட்ராக்டர்கள் கடத்தலினுல்

# சுகாதார, நீர்விநியோக, மின்சாரசேவைகள் முற்றாக ஸ்தம்பிக்கும்!

(யாழ்ப்பாணம்)

"யாழ். மாநகர சபையின் டிராக்டர்கள் கடத்தலினுல் சுகாதாரசேவை மட்டுமின்றி நீர் விநியோக மின்சார சேவைகளும் பாதிப்படைந்து சீர்குலைந்து முற்றாக ஸ்தம்பிதமடைவதுடன் பலர் வேலைகளை இழக்க வேண்டிய நிலையும் உருவாகும்".

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சி.வி. கே சிவஞானம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

"ஏற்கனவே எரிபொருள் தட்டுப்பாட்டினுலும் ஏனைய கட்டுப்பாடுகளினுலும் நகரின் சுகாதார சேவைகள் பாதிப்புருமல் இருக்கும்வண்ணம் கூடிய விலைக்கு எரிபொருளைப் பெற்றும் இம்மாநகராட்சி மன்றம் சேவையாற்றியது. ஆனுல் தற்போது கடத்தப்பட்ட 4 வாகனங்களும் இல்லாது போனுல் நகரின் சுகாதார சேவைகள் நிச்சயமாக ஸ்தம்பிதத்திற்கு வந்துவிடும் என்பதையும், அதனுல் இந்த நகரத்திற்கும் மக்களுக்கும் விபரிக்கமுடியாத சீர்கேடுகள் ஏற்படுமென்பதையு சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிருேம்.

இந்தக் கடத்தல்கள் இயக்கங்களின் பெயர்களைச் சொல்லியே நடத்தப்பட்டிருப்பதனுல் எல்லா இயக்கங்களையும், ஸ்தாபனங்களையும் எமது சேவைகளின் முக்கியத்துவத்தையும் அத்தியாவசியத்தன்மையையும் சுதந்திரமாக இயங்கிவரும் தன்மையையும் கருத்திற்கெடுத்துச் செயற்படுமாறும், கடத்தப்பட்ட வாகனங்களை உடனடியாகத் திருப்பித்தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சக இயக்கங்களைத் தூண்டுமாறும் வேண்டுகோள் விடுக்குமாறும் மிகப் பணிவாகக் கேட்டுக்கொள்கிருேம்."

# இரு இ. போ. ச. பஸ்கள் இன்று திருமலை புறப்படும்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலிருந்து போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த இரு பஸ்கள் இன்று காலை திருகோணமலைக்கு செல்லவுள்ளன.

அண்மையில் திருகோணமலையில் பன்குளத்தில் இடம்பெற்ற பஸ் பிரயாணிகள் துப்பாக்கிச்சூட்டு படுகொலைச் சம்பவத்தில்கொலையுண்ட வடமராட்சியைச் சேர்ந்தவர்களின் சடலங்களைக்கொண்டு வந்த திருகோணமலை டிப்போவைச் சேர்ந்த பஸ் இரண்டுமே இன்று காலை யாழ் பஸ் நிலையத்திலிருந்து திருகோணமலைக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளன.

பாதுகாப்பின்மை காரணமாகவே கடந்த பல நாட்களாக குறிப்பிட்ட இரு பஸ்களும் யாழ். கோண்டாவில் டிப்போவில் தரித்து நின்றதாம். (மா)

நயினுதீவு உற்சவத்துக்குச் செல்வோர்

# அடையாள அட்டைகளை எடுத்துச் செல்ல கோரிக்கை!

[வேலணை]

நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் உற்சவத்திற்குச் செல்லும் யாத்திரீகர்கள் தமது அடையாள அட்டைகளைத் தவருதுகொண்டுவர வேண்டுமென்று இவ்வாலய அறங்காவல் சபையினர் தெரிவித்துள்ளனர்.

இன்று ஆரம்பமாகும் இவ் உற்சவம் சம்பந்தமாக தீவுப் பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் மகாநாடொன்றையும் நயினுதீவில் நடத்தினுர்.

யாத்திரீகர்களை ஏற்றிச்செல்லும் படகுகளுக்கு (டீசல்) எரிபொருள் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்க அதிபருடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதாக உதவி அரச அதிபர், செல்வி மைதிலி சோமசுந்தரம் படகு உரிமையாளர்களுக்கு உறுதிகொடுத்துள்ளார்.

காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை படகுச் சேவைகள் நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வுற்சவகாலத்தில் நெருக்கடி நிலைகள் ஏற்படும் பட்சத்தில் உள்வீதியுடன் அம்பாள் சுற்றுலா முடிவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பகல் உற்சவங்கள் காலை 7 மணிமுதல் 11 மணிவரையும் நடைபெறும் என்றும், மாலை உற்சவம் 1மணிமுதல் 4 மணிவரை நடைபெறும் என்றும் ஆலய அறங்காவல்சபையினர் அறிவித்துள்ளனர்.

இம்முறை வெளியிடங்களிலிருந்து வரும் தொண்டர் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஆலய சுற்ருடலில் உள்ள சமயத்தொண்டர்கள் மட்டுமே தொண்டர் சேவைகளில் ஈடுபட அழைக்கப்பட்டுள்ளனர்.

## மக்கள்வங்கியில் அடகுவைத்த நகைகள்

(யாழ்ப்பாணம்)

மக்கள்வங்கியில் அடகு வைக்கப்பட்ட நகைகளைப் பாதுகாப்பாகக் கொண்டுவந்து யாழ்ப்பாணத்தில் வைத்தே உரியவர்களுக்கு வழங்கும்படி யாழ். பிரஜைகள் குழு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வற்புறுத்தியுள்ளது.

இவ்வாறு செய்வதற்கு ஏற்கனவே ராணுவ இணைபதிகாரி ஒப்புக்கொண்டிருப்பதாகவும் பிரஜைகள் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

## மன்னுர் நிலைமை

(யாழ்ப்பாணம்)

மன்னுரில் மீண்டும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றைத் தொடர்ந்து கடும் சோதனை நடைபெறுவதாகவும் இடையிடையே துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்பதாகவும் கூறப்படுகிறது. (மா)

## ஓர் இயக்கத்தைக் கண்டித்து ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

ஒரு விடுதலை இயக்கத்துக்கு எதிரான சில சுலோக அட்டைகளைத்தாங்கிய பெண்கள், யுவதிகள், ஆண்கள், சிறுவர்கள், உட்பட சுமார் ஐம்பது பேர் அடங்கிய ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நேற்று யாழ்ப்பாண முக்கிய வீதிகளில் நடத்தப்பட்டது.

இவர்கள் சுலோக அட்டைகளையும் தாங்கிச் சென்றனர்.

## இருபாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த ஒரு கிற்ருர் வாத்தியம், மூன்று கஸெட் ரேடியோக்கள், ஒரு மோட்டார் சைக்கிள், ஒரு ஜெனரேட்டர், மூன்றுசைக்கிள்கள், ஒலிபெருக்கிச் சாதனங்களையும் நாளாந்த தேவைக்காக வைக்கப்பட்டிருந்த 800 ரூபாவையும் கைப்பற்றிச் சென்றுள்ளனராம்.

இந்த வழிபாட்டு புனித இடத்தில் கட்டி வைக்கப்பட்ட போதகர்களில் ஒருவர் கண்டியிலிருந்து விசேட ஊழியத்திற்காக வந்து தங்கியிருந்தவர். அவரின் உடமைகளைச் சோதனையிட்டு அவரிடமிருந்த 60 ரூபாவையும், புதிதாக வாங்கி வைத்திருந்த உள்ளங்கி ஒன்றினையும் கைப்பற்றியுள்ளனராம்.

## மரண அறிவித்தல்

### செல்லக்குட்டியர் கந்தையா

தாவடி வடக்கைச் சேர்ந்த செல்லக்குட்டியர் கந்தையா காலமாகிவிட்டர். அவர் அன்னம்மாவின் அன்புக்கணவரும் பாலசுப்பிரமணியம் (இலங்கை மத்திய வங்கி), தேவராஜா (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்), கமலேஸ்வரி, இராசேஸ்வரி, ஆகியோரின் அன்புத்தந்தையும், பரஞ்சோதி, தேவராஜலிங்கம் (இலங்கைப் போக்குவரத்துச் சபை), சாந்த தேவி, லஷ்மிதேவி ஆகியோரின் அன்புமாமனுமாவார் அன்னாரின் இறுதிச்சடங்கு 18-6-85 செவ்வாய்க்கிழமை (இன்று) 12 மணியளவில் தாவடி மயானத்தில் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும், இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

3888

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா பொன்னுத்துரை

அளவெட்டியைச் சேர்ந்த திருமதி செல்லம்மா பொன்னுத்துரை காலமானுர். இவர் ஒறயன் தோட்டம் கம்பனி முன்னுள் தலைமைக் குமாஸ்தா சுப்பிரமணியம் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், சிறிதரன், திருமதி மனோரஞ்சிதம் சச்சிதானந்தம் (டுபாய்), கெங்காதரன் (சவுதி), செல்வி ஜெயரஞ்சினி, செல்வி மாயா ரஞ்சினி ஆகியோரின் அன்புத் தாயும், திரு. S சச்சிதானந்தம் (டுபாய்) அன்பு மாமியும், மிதுலா, சார்மிலா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று மாலை நடைபெறும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சு. பொன்னுத்துரை
கரவச்சை, அளவெட்டி வடக்கு.

(3890)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1985ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81 Eelanadu P. Box 49. Telegram Eelanadu, Telephone: 22389-24126.